31st March 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 25 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




# பாரிய கூட்டணியை அமைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி

## 5ஆம் திகதி தலைவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்து

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதானமாகக் கொண்டு அமைக்கப்படும் கூட்டணி எதிர்வரும் 5ஆம் திகதி உருவாக்கப்பட உள்ளது. 5ஆம் திகதி சுப நேரத்தில் இந்த புதிய கூட்டணிக்கு தலைவர்கள் கையொப்பமிட உள்ளனர். இந்த நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.இந்த நிகழ்வில் அரசாங்க தரப்பிலிருந்து எதிர்கட்சிகள் இணைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர்.

கூட்டணியில்

02ம் பக்கம்பார்க்க...

## ஈஸ்டர் தாக்குதலில் சம்பந்தப்பட்டோருக்கு பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை

### ஈஸ்டர் தின செய்தியில் ஜனாதிபதி ரணில்

ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சம் இன்றியும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில்

02ம் பக்கம்பார்க்க...



## ஐ.எம்.எப் பேச்சு முடியும் வரை தேர்தல் நடாத்த மாட்டேன்

### ஜனாதிபதி அதிரடி

சர்வதேச நாணய நிதிக் குழுவுக்கு இடையிலான பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடியும் வரை நாட்டில் எந்தத் தேர்தலும் நடைபெறாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## நள்ளிரவு முதல் எரிபொருள் விலையில் மாற்றம்

தற்போதைய விலை சூத்திரத்தின் கீழ், இன்று (31) நள்ளிரவு முதல் எரிபொருள்

02ம் பக்கம்பார்க்க...

## மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவில் சிறுபான்மைக்கு கதவடைப்பு

மத்திய மாகாண சபையின் பொதுச் சபை ஆணைக்குழுவிற்கு இவ்வாறு தமிழ், முஸ்லிம் சார்பில் எவரும் நியமிக்கப்படவில்லை. மத்திய மாகாண ஆளுநரினால் சில தினங்களுக்கு முன் பொதுச்சபை ஆணைக்குழு அங்கத்தவர்களுடைய பெயர்கள் வெளியிடப்பட்டன.

02ம் பக்கம்பார்க்க...

## அடுத்து வரும் தேர்தல்களில் விரலுக்கு மை பூசுவது நிறுத்தம்

### தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்களின் போது வாக்காளர்களது கைவிரல்களுக்கு மை பூசுவது நிறுத்தப்படவுள்ளது. தேர்தலின் போது அடையாள

02ம் பக்கம்பார்க்க...

## தேர்தலை தீர்மானிக்கும் அதிகாரம் பசிலுக்கு கிடையாது



### மவ்பிம ஜனதா கட்சி தலைவர் திலித் ஜயவீர

இந்த நாட்டின் தேர்தல்களை தீர்மானிக்கும் எந்த அதிகாரமும் அமெரிக்க பிரஜையான பசில் ராஜபக்சவுக்கு கிடையாதென மவ்பிம ஜனதா கட்சியின்

02ம் பக்கம்பார்க்க...



## ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்!

### ஆதரிக்க மாட்டேன் என்கிறார் சம்பந்தன்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கும் முன்மொழிவை நான் ஆதரிக்கவில்லை. அந்த முன்மொழிவுக்கு

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இஸ்ரேலில்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தமிழ் மக்களிடத்தில் பரவலான கருத்தாதரவு கிடையாது என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலில் யார்யார் போட்டியிடப்போகின்றார்கள் என்பது சம்பந்தமாக உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் வெளியாகவில்லை.

அந்த அறிவிப்புக்கள் உறுதியாக வெளியானதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்கு தமிழ் மக்களிடத்தில் பரலவலான ஆதரவு கிடையாது.

அத்துடன் குறித்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சதகமான நிலைமைகளை உருவாக்கும் என்றும் நான் கருதவில்லை. தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழுவதற்காக ஆணையை வழங்கி வந்துள்ளார்கள்.

அவ்விதமான நிலையில் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழர்கள் சார்பில் களமிறக்கும் விடயத்தினை நான் ஆதரிக்கவில்லை.

அதேநேரம் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்களை இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. அவர்கள் அவ்வாறு அறிவிக்கின்றபோது நாம் இறுதியான தீர்மானத்தினை எடுப்போம்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஐக்கிய இலங்கைக்குள் அதியுச்ச அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கோரிவருகின்றார்கள்.

அத்துடன் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்களின் வரலாற்று ரீதியான வாழிடங்களான வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான கோரிக்கைகளை ஆதரிப்பவர்கள் பற்றியே நாம் கருத்தில் கொள்ள முடியும் என்றார்.

## ஈஸ்டர்....
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் முகமாக ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.

## ஐ.எம்.எப்....
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இவ்விடயமாக ஜனாதிபதி தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அமைச்சரவைக்கும் அறிவித்துள்ளார்

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியின் இறுதிக் கொடுப்பனவு கிடைக்கும் வரை தேர்தல்கள் நடத்துவதில் சாத்தியப்பாடுகள் இல்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க ஐஆகு உடனான கடனுதவி தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஜூலை மாதம் வரை நீடிக்கும் எனவும் அதன் பின்னரே தேர்தல் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அசுர வேகத்தில்
வலம் வந்து
கொண்டிருக்கும்
உதயம்
பத்திரிகையில்
உங்களது
நிறுவனங்களின்
விளம்பரங்களை
பிரசுரிக்க
வேண்டுமாயின்
தொடர்புகளுக்கு:
075 5 840830

## பாரிய...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஏற்கெனவே உள்ள தமிழ் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதோடு மேலும் பல எதிர்க்கட்சிகளும் இக் கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மொட்டுக் கட்சியிலிருந்து வெளியேறி சுயேட்சையாக செயப்பட்டு வரும் டளஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினரும் இகா கூட்டணியில் இணைவதற்கான இறுதிக் கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நள்ளிரவில்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

உலக கச்சா எண்ணெய் விலை மற்றும் உலக பொருளாதார நிலவரப்படி நாட்டில் எரிபொருள் விலை குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலை மற்றும் எதிர்வரும் பண்டிகை காலத்தை கருத்திற் கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் எரிபொருள் விலையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மத்திய...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

மத்திய மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் பிரதிநிதியாக இருந்தனர். இம்முறை மட்டுமே இரு சமூகத்திற்கும் பிரதிநிதிகள் வழங்கப்படவில்லை என மத்திய மாகாண சபை பிரமுகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தேர்தலை...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தலைவர் திலித ஜயவீர தெரிவித்தார். பதுளையில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி நாட்டை நேசிக்கும் 69 இலட்சம் மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி மொட்டு சின்னத்தை எனது கைகளினால் நானே வரைந்தேன். அந்த கட்சி பெசில் ராஜபக்ஷவின் கட்சி அல்ல ,நாமல் ராஜபக்ஷவின் கட்சி அல்ல அது நாட்டை நேசிக்கும் 69 இலட்சம் மக்களின் கட்சி. இந்த நாட்டில் எந்த தேர்தல் நடத்த வேண்டுமென அமெரிக்க பிரஜையான பெசில் தீர்மானிக்க அனுமதிக்க முடியாது என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர குறிப்பிட்டுள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற கட்சி மாவட்ட மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தன்னையே தெரிவு செய்ய வேண்டும் மொட்டு கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் இல்லை என அமைச்சர் பிரசன்ன ரனதுங்க கூறியுள்ளார். பெசிலின் மொட்டு கட்சிக்கே ஜனாதிபதி வேட்பாளர் இல்லை. நாட்டை நேசிக்கும் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மொட்டுகட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட நான் இருக்கிறேன் என அவர் குறிப்பிட்டார்.

## அடுத்துவரும்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அட்டையை சமர்பிப்பது கட்டாயமாகி இருப்பதனால் கைவிரல்களுக்கு மை பூசுவதனை நிறுத்துவதற்கு தீர்மானித்திருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.இத்தீர்மானம் வரும் தேர்தல்களில் இருந்து அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



# இலங்கை கிரிக்கெட்டை உலகின் தலைசிறந்ததாக மீண்டும் காண்பதே ஆசை

## - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க -




இலங்கை கிரிக்கெட்டை உலகில் தலைசிறந்தாக ஒன்றான மீண்டும் காண்பதே எதிர்பார்ப்பாகும் என்றும் அதற்கு அவசியமாக அனைத்து ஒத்துழைப்புக்களையும் அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற சிங்கள விளையாட்டுக் கழகத்தின் (SSC)125ஆவது ஆண்டு பூர்த்தி விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் தெரிவித்தார்.

சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125 வருட வரலாற்றைக் குறிக்கும் வகையில் புத்தகமும் முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.சர்வதேச கிரிக்கட் களத்தில் இலங்கை அணியை வழிநடத்திய எஸ்.எஸ்.சி வீரர்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது பாராட்டியதுடன், அவர்களுடன் குழு புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

இவ்விழாவில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ”றோயல், சென். தோமஸ், வெஸ்லி உள்ளிட்ட பாடசாலைகளில் இருந்து கிரிக்கெட்டில் இணைந்தவர்கள் அனைவரும் இங்கு வந்து சிங்கள விளையாட்டுக் கழகத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். அதேபோன்று எனது பாட்டனாரான மீதெனிய அதிகாரம், எனது தாத்தா சி.எல். விக்கிரமிசிங்க உட்பட அக் காலத்தைச் சேர்ந்த பலரும், இலங்கையர் என்ற அடையாளத்தை நிலைநாட்ட விரும்பியதாலேயே சிங்கள விளையாட்டுக் கழகத்தில் இணைந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் எனது தந்தையாரும் இணைந்துக்கொண்டார்.

விளையாட்டுக் கழகங்களில் அரசியல்வாதிகளுக்கு உயர் பதவிகள் வழங்காமல் இருப்பது அனைவருக்கும் நல்லதாகும் என நம்புகிறேன். அதேபோல் அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக வைத்திருப்பது காலோசிதமானதாகும். அதேபோல், இலங்கை கிரிக்கெட்டை பாதுகாப்பதோடு, கிரிக்கெட்டில் இலங்கை முன்னணி இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

1000-1500 பாடசாலைகளில் கிரிக்கெட்டை மேம்படுத்த வேண்டும். பின்னர் தேசிய அணிக்கு தேவையான கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான குழாம் ஒன்றை உருவாக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டை பலப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இப்பணிகளில் கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மீது பெரும் பொறுப்பு சார்ந்துள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையை கிரிக்கெட்டில் உலகின் தலைசிறந்த நாடாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.“ என்று ஜனாதிபதி தெரிவித்தார்.






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2024 MARCH 31 - SUNDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

## சமூக மறுமலர்ச்சிக்கு பங்காற்றிய மௌலவி ஏ.எல்.எம் இப்றாஹீம்

இலங்கை முஸ்லிம் சமூக ஆளுமைகளுள் முக்கிய ஆளுமையாக மதிக்கப்படும் மௌலவி அல்ஹாஜ் ஏ.எல். இப்ராஹிம் காலமான செய்தியை மிக ஆழ்ந்த வேதனையுடன் நாம் பதிவு செய்கிறோம்.

மாவனல்ல உயன் வத்தையை பிறப்பிடமாகக் கொண்ட மௌலவி இப்ராஹிம் இலங்கை ஜமாத் இஸ்லாமியின் முதன்மை தலைவர்களுள் ஒருவராக திகழ்ந்தார்.பேராதனை மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் அரபு இஸ்லாமிய கற்கை துறைகளில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்த இவர் இலங்கை முஸ்லிம் சமூகத்தை அறிவு சார்ந்து நகர்த்துவதில் சிறப்பான பங்களிப்பை செய்தவராவர்.ஆறு தசாப்தங்களுக்கு மேல் இஸ்லாமிய பணிபுரிந்து அவரது பணிகளில் சதா பேசப்படும் நிறுவனங்களாக மாவனல்லை ஆயிஷா சித்திக்கா அரபு கல்லூரியும் திஹாரிய தன்வீர் அகடமியும் திகழும் என்பதில் சந்தேகமில்லை.இது தவிர இவர் மாதம்பை மற்றும் புத்தளம் இஸ்லாஹியா அரபுக் கல்லூரி,ஒட்டமாவடி பாத்திமா சஹ்ரா அரபுக் கல்லூரிகள் இவரது பங்களிப்பினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களாகும்.

சிங்கள மொழி இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாதது என்பதனை உணர்ந்து திஹாரிய தன்வீர் அகடமியை ஆரம்பித்தார். இதன் மூலம் நூற்றுக்கணக்கான சிங்கள மொழியில் பணிபுரியும் மௌலவிமார்களை உருவாகியுள்ளனர்.

குர்ஆனின்முதல்சிங்களமொழிபெயர்ப்பின்முன்னோடியாகவும் அவர் திகழ்ந்தார்.முஸ்லிம் சமூகத்திலே ஒற்றுமை ஏற்படுவதற்கு இப்ராஹிம் மௌலவி ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. அதுமட்டுமின்றி நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இப்ராஹிம் மௌலவி சிறப்பாக பணியாற்றி உள்ளார். மௌலவி இப்ராஹிமின் பங்களிப்புடன் உருவான தன்வீர் அகடமி இந்நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லுறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கு சிங்கள மொழி நிபுணத்துவம் பெற்ற உளமாக்களின் தேவை மிக அவசியமான காலத்தில் அதனை உருவாக்கினார்.ஆசிரியராக விரிவுரையாளராக ஜமாத் இஸ்லாமிய தலைவராக நூலாசிரியராக பேச்சாளராக பணிபுரிந்த இவர் தனது 87வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.பல விடயங்களில் முன்னோடியாக திகழ்ந்த மௌலவி இப்ராஹிமின் மறுமை வாழ்வு சிறப்பாக அமைய பிரார்த்திப்போம்.மௌலவி இப்ராஹிம் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றில் ஒரு அத்தியாயத்தை தனக்கு உரித்தாக்கி இருக்கின்றார்.அவருடைய பங்களிப்புகள் மூலம் முஸ்லிம் சமூகம் இன்று அடைந்திருக்கின்ற முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்திருக்கிறது.எளிமையாக என்றும் சிரித்த முகத்துடன் வாழ்கின்ற அவரது வாழ்வும் பணியும் முழு நாட்டிற்கும் முன்மாதிரி மிக்கதாக அமைந்திருக்கின்றது.

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு பங்காற்றிய ஒரு சிறந்த தலைவராக அவரை குறிப்பிடலாம்.

அவருடைய வாழ்க்கையின் வெற்றியில் அவர் கடைப்பிடித்த நடுநிலை போக்கே காரணமாகும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்"
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

# இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையே காணப்படும் நல்லிணக்கமே நாட்டின் பலம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச









எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், நட்புறவு என்றென்றும் பேணப்பட வேண்டும். நாட்டுக்கு இதுவே பக்க பலம். அந்தந்த மதங்களுக்குரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். பன்முகத்தன்மையை பாராட்ட வேண்டும். பன்முகத்தன்மையில் உருவாகும் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும், கலாசார விழுமியங்களுக்கும் உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான அடையாளத்தை பாதுகாக்க வேண்டும். மத சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாக்க வேண்டும். சுதந்திர நாட்டில் நாங்களும் நீங்களும் நம்பும்,பின்பற்றும் மதத்தைப் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல ஒன்றிணையுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இஸ்லாமிய மத நடைமுறைகளின்படி நோன்பு நோற்பதில் அனைவருக்குமிடையேயான பரஸ்பர நட்பு, சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் இஸ்லாமிய சமயக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உன்னத குணங்கள் நிறைவேறும் காலகட்டமாக இது அமைவதால்,ஆன்மீக ரீதியாக பக்குவப்பட்டு இறை திருப்தி சகலருக்கும் கிட்ட வேண்டும் என தான் நேர்மனம் கொண்டு பிரார்த்திப்பதாகவும், விரும்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கொழும்பு வெள்ளவத்தை மெரைன் கிறேண்ட் வரவேற்பு மண்டபத்தில் (29) தினம் இடம் பெற்றது.




# நானா நீயா அவனா?


சபீர் மொஹமட்

## எண்ணங்களை எண்ணங்களால் தான் தோற்கடிக்க முடியும் சட்டங்களால் அல்ல!

கடந்த 28ஆம் திகதி பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தது. நோன்பு பெருநாள் முன்னதாகவே வந்தது போல் சில முஸ்லிம்கள் இதனை கொண்டாடுகிறார்கள். அதேபோல் சில பெரும்பான்மையினருக்கு இப்போதுதான் கருத்து சுதந்திரம் என்ற வசனம் வாயில் வருகின்றது. இந்த இரண்டுக்கும் மத்தியில் இன்னும் சிலர் புதிய அரசாங்கம் பற்றி கவிதையும் எழுதுகின்றனர்.

**ஞானசாராவுக்கு ஏன் இந்த தண்டனை?**

2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மத நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் முஸ்லிம்களுக்கு எதிராக அவதூறான கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் சட்டமா அதிபர் முன்வைத்த இரண்டு குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதால் இந்த தண்டனை வழங்கப்பட்டது. முஸ்லிம்கள் தமது மத வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்ற பலாங்கொடை ஜெய்லானி பள்ளிவாயல் தொடர்பிலேயே ஞானசார தேரர் குறித்த கருத்தை தெரிவித்து இருந்தார். அதிலே 'அல்லாஹ்' பற்றி மிகவும் கேவலமான முறையில் ஞானசார தேரர் கருத்து தெரிவித்திருந்தமை முஸ்லிம்களின் மனதை மிகவும் புண்படுத்திய ஒரு விடயமாக காணப்பட்டது. பின்னர் இது தொடர்பில் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து எட்டு வருடங்களின் பின்னர் இலங்கை தண்டனை சட்டக்கோவையின் 291ஆவது பிரிவின் அடிப்படையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணையின் போது ஞானசார தேரர் தரப்பில் இருந்து ஒரு சில வாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவற்றை நாங்கள் சற்று உண்ணிப்பாக அவதானிக்க வேண்டும்.

“அப்போது உலகில் தீவிரவாதத் தாக்குதல்களும், நாடுகளுக்கு இடையே போர்களும் நடந்து கொண்டிருந்ததுடன் இஸ்லாமிய தீவிரவாதம் உலகில் பரவலாக காணப்பட்டது”

“ஆப்கானிஸ்தானில் இஸ்லாத்தின் பெயரால் பாமியான் புத்தர் சிலைகள் அழிக்கப்பட்டிருந்தது..”

இதனாலே ஞானசார தேரர் அன்று முஸ்லிம்களுக்கு எதிராக அவ்வாறு பேசியிருந்தார், என்ற வாதம் ஞானசார தேரர் சார்பில் முன்வைக்கப்பட்டிருந்தது. உண்மை என்னவென்றால் இஸ்லாமிய தீவிரவாதம் என்பதை விட உலகில் அப்போது மிகப்பெரிய பல பிரச்சினைகள் காணப்பட்டன. இஸ்லாமிய தீவிரவாதம் என்பதன் தேவை இலங்கை அரசியல்வாதிகளுக்கே அப்போது தேவைப்பட்டிருந்தது.

சமூக வலைத்தளங்களில் கடந்த வாரம் பிரதானமான பேசு பொருள் இதுவாகும். ஏற்கனவே கூறியது போல் ஒரு சில பெரும்பான்மையினருக்கு இப்போது தான் கருத்து சுதந்திரம் என்ற வசனம் ஞாபகத்திற்கு வந்துள்ளது. கடந்த வருடம் 'புத்தபெருமானை அவமதித்தார்' என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஸ்டாண்ட் அப் காமெடியன், நடாஷா எதிரிசூரியவை விடுதலை செய்கின்ற நீதிமன்றம் அல்லாஹ்வை அவமதித்ததாக கூறி ஞானசார தேரரை கைது செய்கின்ற நிலை இந்த பௌத்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது, என ஒரு சிலர் குமுறுகின்றார்கள். நடாஷா கூறிய விடயம் திரிபுப்படுத்தப்பட்டு சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதுடன் நீதிமன்றம் தெளிவாக நடாஷா குற்றவாளி அல்ல என்பதை குறிப்பிட்டிருந்தது. நடாஷாவுடைய அந்தக் கருத்தையும் ஞானசார கூறிய இந்த விடயத்தையும் ஒருபோதும் ஒன்றாக இணைத்து கூற முடியாது.

மதத்தை கேள்வி கேட்கக்கூடிய உரிமை நிச்சயமாக ஒரு ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மூடநம்பிக்கைகள் மற்றும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற விதத்தில் மதம் மாற்றியமைக்கப்படலாம். ஆனால் ஞானசார தேரருடைய கருத்து வெறுமனே மதத்தை பற்றிய கேள்வி அல்ல. மாறாக அது வன்முறையை கட்டவிழ்த்து விடக்கூடிய மற்றும் நீண்ட கால ஒரு அரசியல் தேவையின் வெளிப்பாடாகும். ஞானசார தேரர் நீதிமன்றத்தில் கூறியது போல் உடனடி கோபம் காரணமாக அவர் கூறிய கருத்தாக இது ஒருபோதும் அமைந்து விடாது.

2014 ஜ"ன் மாதம் பேருவளை அழுத்கமை கலவரங்கள் ஏற்படுவதற்கு முன்னர் ஞானசார தேரர் நிகழ்த்திய “அப சரண“ உறையும் அந்த உரையில் காணப்பட்ட முஸ்லிம்கள் மீதான வெறுப்பு மற்றும் வன்முறையை தூண்டும் விதமான கருத்துக்கள் என்பவற்றை கொஞ்சம் மீட்டிப் பாருங்கள். குறித்த கலவரத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போலீசாரின் கைகளை கட்டிவிட்டு வன்முறையை கட்டவிழ்த்துவிட்ட உண்மை பலருக்கும் தெரியும். இலங்கையில் உண்மையிலேயே சட்டம் செயற்பட்டிருந்தால் அன்று ஐஊஊஹீசு சட்டத்தின் அடிப்படையில் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு இருப்பார். அது நடக்கவில்லை!!

அதேபோல், 2015ஆம் ஆண்டு “நல்லாட்சி“ என ஆட்சிக்கு வந்த அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாகல ரத்நாயக உட்பட அனைவரும் ஞானசார தேரர் உட்பட இனவாத குழுக்களை சுதந்திரமாக வளரவிட்டார்கள். குறிப்பாக டான் பிரியசாத், அமித் வீரசிங்க போன்ற குழுக்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துக்களை மிகவும் கடுமையான வெறுப்புடன் நாடு பூராகவும் விதைத்தனர். ஹலால் பிரச்சினை முதல் முஸ்லிம்களின் சொத்துக்களை அழிப்பது, கூரகல, வில்பத்து போன்ற பல பிரச்சினைகளையும் வளரவிட்டார்கள். அதேபோல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் நாட்டிலே ஏற்பட்ட கலவரங்கள் மற்றும் முஸ்லிம்களின் சொத்து அழிப்பு இவை அனைத்தும் நிகழ்ந்தது நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது என்பதையும் மறந்து விடக்கூடாது. அன்று அவ்வாறு செய்த ஆட்சியாளர்கள் தான் மீண்டும் இன்று இங்கே ஆட்சியில் உள்ளார்கள். அவர்கள் தான் ஞானசார தேரரை கைதும் செய்துள்ளார்கள். எனவே அரசாங்கத்திற்கு சார்பாக கவிதை எழுதுவதற்கு முன்னர் கொஞ்சம் வரலாற்றை திருப்பிப் பாருங்கள். ஏற்கனவே ஒரு முறை நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு பின்னர் மக்கள் எதிர்ப்பு காரணமாக ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு கிடைத்தது. இன்று, கைது செய்யப்பட்ட இரண்டாவது நாளில் ஞானசார தேரர் சிறைச்சாலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒருவேளை ஞானசார தேரரின் சிறைத்தண்டனை குறைக்கப்படலாம். இல்லாவிட்டால் அவருக்கு மீண்டும் ஜனாதிபதி பொது மன்னிப்பு கிடைக்கலாம். அப்போது ஞானசாரவின் வீரம் மேலும் அதிகரிக்கும். சிங்கள பௌத்தர்கள் மத்தியில் ஞானசார மீண்டும் ஒரு வீரனாக வலம் வருவார். இனவாதத்தையும் சமூகங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தக்கூடிய சிந்தனைகளையும் தோற்கடிக்க சட்டத்தால் முடியாது. மாறாக மக்கள் மத்தியில் இருந்து அவற்றுக்கு எதிரான சிந்தனைகள் எழ வேண்டும். எண்ணங்களை எண்ணங்களால் தான் தோற்கடிக்க முடியும். மாறாக சட்டங்களால் அல்ல.

# “சிறந்த எழுத்தாளர்” விருது பெற்றார் கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

*இந்திய இலங்கை நட்புறவு ஒன்றியம் அண்மையில் கண்டியில் நடாத்திய ”மலையகம் 200” விருது வழங்கும் நிகழ்வின் போது, கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.*

*ஓய்வுபெற்ற ஆசிரியையும் பன்னூலாசிரியரும், இலக்கிய ஆளுமையுமான இவர், முன்னாள் ஆளுநரும், முன்னாள் மத்திய மாகாண சபை முதலமைச்சருமான சரத் ஏக்கநாயக்க உட்பட்ட அதிதிகளிடமிருந்து இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.*

# துறைமுக நகர் அதிவேக வீதி ஜூலையில் திறப்பு!

கொழும்பு, இங்குறுகடை சந்தியில் இருந்து துறைமுக நகரம் வரை தூண்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பால அதிவேக வீதி ஜ"லை மாதத்தில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

இந்த அதிவேக வீதியின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. 5.3 கிலோமீட்டர் நீளமான இந்த அதிவேக வீதி நான்கு ஒழுங்கைகளைக் கொண்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய இங்குறுகடை, புறக்கோட்டை, அளுத்மாவத்தை, காலி முகத்திடல் மற்றும் துறைமுக நகரம் ஆகிய 5 உள்நுழைவுகளை இந்த அதிவேக வீதி கொண்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிவேக வீதியை துறைமுகத்தில் இருந்து இடையூறுகள் இன்றி கொள்கலன்கள் போக்குவரத்திற்கான புதிய உள்நுழைவாக பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக வீதிக்கு 28 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



# ஆசிரியர் சேவையில் உறுதிப்படுத்தியதை மீளப்பெற்றமை குறித்து மீளாய்வு செய்க

## இம்ரான் எம்.பி கல்வி அமைச்சு செயலாளரிடம் கோரிக்கை

(எம்.ஏ. பறூஸ்)

கிண்ணியா மற்றும் மூதூர் வலய ஆசிரியர்கள் சிலருக்கு வழங்கிய பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங்களை கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இரத்துச் செய்துள்ளது. இது குறித்து மீளாய்வு செய்யுமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை செயலாளரை அவரது அமைச்சில் சந்தித்து இக்கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். அவர் வழங்கியுள்ள கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் சில ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அத் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதற்காக பின்வரும் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016.10.14 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்க புதிய ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பின் 8 வது பந்தியில் 1வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையாக



3 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சான்றிதழைப் பூரணப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பூர்த்தி செய்யாத காரணத்தினால் ஏற்கனவே வழங்கிய உறுதிப்படுத்தல் கடிதம் இரத்துச் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கே கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களக் கடிதத்தில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு வெளிவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள திகதி தவறானது. இத்திணைக்களம் குறிப்பிட்டுள்ள இலக்கத்தையுடைய ஆசிரியர் சேவை பிரமானக் குறிப்பின் 8 வது பந்தி முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சை தொடர்பாகவே குறிப்பிடுகின்றது. அதுவும் இத்தடை தாண்டலுக்கு 96 மணித்தியாலயங்களைக் கொண்ட மொடியூல்கள் பூரணப்படுத்துவது தொடர்பாகவே இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் கலாசாலை சான்றிழ் குறித்து இப்பந்தியில் குறிப்பிடப்படவில்லை.

ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பில் குறிப்பிடப்படுள்ள 1 ஆம் வினைத்திறன் தடைதாண்டல் தேவைப்பாடுகளை பூரணப்படுத்திய ஆசிரியர்களே பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங்களை ஏற்கனவே பெற்றிருந்தனர். அதுவே பின்னர் பொருத்தமான காரணம் இன்றி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பின் புரிதலில் உள்ள குறைபாடு காரணமாகவே இந்த இரத்துச் செய்தல் கடிதங்கள் சில ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. எனவே, இந்த விடயங்களை மீளாய்வு செய்து பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங்களை மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சமூக ஊடக பயிற்சி கருத்தரங்கு



(அஷ்ரப் ஏ சமத்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் பிரச்சாரப் பிரிவினால் சமூக ஊடக வலையத்தளங்கள் ஊடாக தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் வீடமைப்பு அபிவிருத்திகள் மற்றும் குறைபாடுகளை பிரச்சாரப்படுத்துவதற்காக சமூக ஊடக பயிற்சிக் கருத்தரங்கு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை வீடமைப்பு அதிகார சபை மேற்கொண்டது. தமிழ் பேசும் அலுலவகர்களுக்கு ஊடக விரிவுரைகள் தமிழ் மொழியில் நடைபெற்றதோடு, பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையின் தலைவர் சட்டத்தரனி ரஜிவ் சூரியாராச்சி, பொது முகாமையாளர் பொறியியலாளர் ஜானக்க மற்றும் உதவி பொது முகாமையளர் சுபசிங்க ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பும் இப்தார் நிகழ்வு போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர்தீன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (26) காத்தான்குடி கடாபி ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் இப்தார் நிகழ்வில் உள்ளூர் ஊடகவியலாளர்கள் மற்றும் சகோதர இனத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீன்கோட்டை முத்துக்கள் அமைப்பின் இஃப்தார் நிகழ்வு



(பீ.எம்.முக்தார்)

பலஸ்தீனத்தில் வாழும் மக்களின் நிரந்தர சமாதான அமைதிக்காக வேண்டி விஷேட துவா பிரார்த்தனையும் இத்தார் நிகழ்வும் பேருவளை சீன்கோட்டை முத்துக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பெருகமலை வரவேற்பு மண்டபத்தில் (26) இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம். ராமிஸ் நாஸிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி முஹம்மத் அஸ்லாம் (முஅய்யதி) துவா பிரார்த்தனையை நிகழ்த்தினார்.

முதல் முறையாக இடம் பெற்ற இந்த இப்தார் நிகழ்வின் குழும அங்கத்தவர்கள் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக நீர் தின விழா 2024



(பி.எம். முக்தார்)

தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபை ஏற்பாடு செய்த உலக நீர் தின விழா 2024 நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (22) நீர் மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு மையத்தில் இடம்பெற்றது.

நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 25 வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றிய ஊழியர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், உயர்தர பரிட்சையில் 3ஏ சித்தி பெற்ற சபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசீல்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் நடப்பாண்டுக்கான நீர் வளங்கள் வடிகால் அமைப்பு சபையில் சிறந்த காரியாலய தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்ற காரியாலயங்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் "சமாதானத்துக்காக நீர்" என்ற தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். டி தர்மரத்ன விசேட சொற்பொழிவாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு






(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச். யூ சுசந்தவின் நெறிப்படுத்தலில் அண்மையில் (24) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம், சிங்கள உள்ளிட்ட கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 300 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேலும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனிபா, அம்பாறை மாவட்ட பனிஷ்மா அதிபர் ஜெ. எச். எம். என். ஜெயபத்மா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்கள், பொறுப்பாளர்கள், அதிகாரிகள் உட்பட பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# அழிவை தேடிய இஸ்ரேலிய அரச தலைமை...

## - எச்சரிக்கை செய்யும் சர்வதேச சமூகம்!-

சர்வதேச அரசியலை தொடர்ந்து பதற்றத்தில் வைத்திருக்கும் இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் 172வது நாளை எட்டியுள்ளது. இதுவரை 32 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காஸாவில் கொல்லப்பட்டுள்ளனர். 74 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இஸ்ரேலை காட்டிலும் காஸாவின் நிலை தான் மிக மோசமாக உள்ளது. ஹமாஸ் படையினரின் தாக்குதல் திட்டத்தால் காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் ஒவ்வொரு நாளும் பேரதிர்ச்சிக்கு ஆளாகி வருகின்றனர்.

ஹமாஸ் இயக்கத்தினரால் அடைத்து வைக்கப்பட்டுள்ள 130க்கும் மேற்பட்ட பிணையக் கைதிகள் விடுவிக்கும் முயற்சிகளை பாதிக்கும் என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு இஸ்ரேலிய பிரதிநிதிகள் மேற்கொள்ள இருந்த பயணம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

போரை தடுக்க ஐநா பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும், இஸ்ரேல் அதை மதிக்கவில்லை. ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் போர் நிறுத்த தீர்மானம் கொண்டு வரப்பட்ட நிலையில் அமெரிக்கா முன்மொழிந்த நகல் தீர்மானம் ரத்து செய்யப்பட்டதை அடுத்து வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டது.

காசாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் எகிப்திய எல்லைக்கு ஐ.நா தலைமைச் செயலாளர் அண்டோனியோ குட்டரஸ் பயணம் மேற்கொண்டுள்ளார். இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடுமையான போர் நிலவி வரும் நிலையில் போர் நிறுத்தத்துக்கு மீண்டும் அழைப்பு விடுக்கும் வகையில் அவர் அங்கு சென்றுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த ஐந்து மாதங்களாக நடந்து வரும் போர் காரணமாக பல லட்சக்கணக்கான பாலஸ்தீனர்கள் அவதியுறுவதாக ஐ,நா கவலை தெரிவித்துள்ளது. இந்நிலையில் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்களை அமெரிக்கா இதற்கு முன்பு ஏற்ஜ்க மறுத்தது. கடந்த வாரம் வெள்ளியன்று, பணயக்கைதிகளை விடுவிப்பதோடு இணைந்த போர்நிறுத்த தீர்மானத்தை முன்வைத்தது. அந்தத் தீர்மானத்தை ரஷ்யாவும், சீனாவும் ஏற்க மறுத்தன.

இந்நிலையில் பாதுகாப்பு கவுன்சிலின் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட தீர்மானம், ரமலான் மாதத்திற்கான உடனடி போர்நிறுத்தம், பணயக்கைதிகளை உடனடியாக மற்றும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரியது. இன்று (மார்ச் 25) நடந்த வாக்கெடுப்பில் அமெரிக்கா பங்கேற்காத நிலையில், 15 நாடுகளை கொண்ட கவுன்சிலின் மற்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர்.இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை அமெரிக்கா பலமுறை தடுத்துவிட்டது, ஆனால் மக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதால், காஸாவில் வரவிருக்கும் பஞ்சம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்ததால், தீர்மானத்தை வீட்டோ அதிகாரம் மூலம் தடுக்காமல், வாக்களிப்பை புறக்கணித்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலை தொடர்ந்து ஹெஸ்பொல்லா – இஸ்ரேல் ராணுவம் இடையேயான சண்டை தீவிரம் அடைந்துள்ளது. ஹமாஸ்/க்கு துணை நிற்கும் விதமாக இரான் ஆதரவு பெற்ற ஹெஸ்பொல்லா, இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதலை தொடுத்துள்ளது.

பலம் வாய்ந்த ஹெஸ்புல்லாஹ் இது ஈரானின் மாற்று ராணுவம் (செழஒல) என்பதை சர்வதேச சமூகம் நன்கு அறியும். ஹிஸ்புல்லாஹ் ராணுவம் ஷியா சட்டத்தை பின்பற்றவும் சக்தி வாய்ந்த இவர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் இஸ்ரேலிய இராணுவம் திக்கு முக்காடி வருகிறது. இதன் காரணமாக எல்லைப் பகுதிகளில் வசித்த சுமார் 3,30,000 இஸ்ரேலியர்கள் தங்கள் வீடுகளை காலி செய்து விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். தீவிரமான சண்டை லெபனான் எல்லையின் இருபுறமும் உள்ள நகரங்களை காலி செய்துள்ளது. நிச்சயமாக வருங்காலத்தில் இஸ்ரேல் தொடர்ந்து பல்வேறு சிக்கல்களை சந்திக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே உண்மையாகும்."

20 வருடங்கள் அமைதியாக இருந்தது. நிச்சயமற்ற (ரஉெநசவயலைவெநைள) நிலையும் இருந்தது. எதிரிகள் இடையே என்ன நடக்கிறது. அவர்கள் என்ன திட்டமிடுகிறார்கள்? என தெரியவில்லை. இந்த சமயத்தில் அவர்கள் வளர்ந்துவிட்டனர். அமைதியாக வாழ பழகிவிட்டோம். ஆனால் தற்போது அவர்களை இங்கிருந்து தூரமாக தள்ள வேண்டும் என நினைக்கிறேன். இப்படி சீயோனிஷ கொள்கை ஈர்ப்பு சக்திகள் எண்ணுகின்ற சூழலில் இனி அமைதி என்பதே இந்த பிராந்தியத்தில் இல்லை. இந்த நிலையில் இஸ்ரேலிய சமூகம் தங்கள் உயிர்களை பாதுகாத்து கொள்ள மிகவும் கடுமையாக போராட வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது காணப்படுகிறது. நான் எங்கே போவேன்? இங்குதான் எனக்கு வேலை இருக்கிறது. எல்லாமே அருகில் இருக்கிறது. நான் என் வீட்டில் இருக்க வேண்டும்" என்று பாதிக்கப்பட்ட இஸ்ரேலியர் ஒருவர் கூறினார். இது தான் தற்போதைய நிலையாகும்.

இஸ்ரேல் தூதுக்குழுவின் வாஷிங்டனுக்கான பயணத்தை மீண்டும் திட்டமிட பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் ஒப்புக்கொண்டதாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன்-பியர் செய்தியாளர்களிடம் கூறினார், தெற்கு காசா நகரமான ரஃபாவில் இஸ்ரேலின் திட்டமிட்ட தரைப்படை ஆக்கிரமிப்பு குறித்த அமெரிக்க கவலைகள் குறித்து மேலும் விவாதிக்க. போர்நிறுத்தத் தீர்மானத்தின் மீதான ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் வாக்கெடுப்பில் இருந்து அமெரிக்கா விலகியதை அடுத்து, இஸ்ரேல் தூதுக்குழுவை ரத்து செய்தது.

தற்போதைய நிலையில் சர்வதேச சமூகத்தின் அரவணைப்பில் இருந்து இஸ்ரேல் தனித்து விடப்பட்ட நிலையில் அமெரிக்காவும் மெல்ல மெல்லத் நகன்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது . இந்த போர் முடிவுக்கு வரும் நிலையில் இஸ்ரேலிய சமூகம் மிகப்பெரிய அழிவை சந்திக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை.இதனை அமெரிக்கா மிகவும் நன்கு உணர்ந்து உள்ளதே இது போன்ற சர்வதேச செயல்பாடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.

பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தனது உயர்மட்ட உதவியாளர்களுக்கும் மூத்த பிடென் நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே இந்த வாரம் ரத்து செய்யப்பட்ட சந்திப்பை "மறுதிட்டமிட ஒப்புக்கொண்டது" என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன்-பியர் புதன்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். "ஒரு வசதியான தேதியைக் கண்டறிய நாங்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்," என்று அவர் மேலும் கூறினார்.

"உடனடி" நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தில் இருந்து திங்களன்று அமெரிக்கா விலகியதை அடுத்து, தெற்கு காசா நகரமான ரஃபாவில் ஹமாஸ்/க்கு எதிரான இஸ்ரேலின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை பற்றிய அமெரிக்க கவலைகள் பற்றி விவாதிக்க ஜனாதிபதி பிடென் கேட்டுக் கொண்ட அமர்விலிருந்து நெதன்யாகு வெளியேறினார்.

செவ்வாயன்று செய்திக்கு பதிலளித்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், தூதுக்குழுவின் வருகை ரத்து செய்யப்பட்டது "ஆச்சரியமானது மற்றும் துரதிர்ஷ்டவசமானது" என்றார். அதாவது அமெரிக்கா இஸ்ரேல் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பிடென் நிர்வாகம் ரஃபாவில் ஒரு "பெரிய இராணுவ நடவடிக்கைக்கு" ஆதரவளிக்காது என்று கூறியுள்ளது, அதாவது எந்த நிலையிலும் அமெரிக்கா மனித சமூகத்திற்கு எதிரான தாக்குதலை விரும்பாது என்று இந்த செய்தியின் மூலம் அமெரிக்கா உலக சமூகத்திற்கு தெளிவான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதேநேரத்தில் இங்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான காசா மக்கள் இஸ்ரேலிய வான் மற்றும் தரை தாக்குதல்களில் இருந்து தப்பி ஓடிவிட்டனர். இஸ்ரேல் குடிமக்களை இடமாற்றம் செய்வதாகக் கூறியது, ஆனால் அவ்வாறு செய்வதற்கான எந்த திட்டத்தையும் முன்வைக்கவில்லை. அவர்களை நகர்த்த வேறு இடமில்லை என ஐ.நா., மற்றும் சர்வதேச உதவி அமைப்புகள் எச்சரித்துள்ளன. அதாவது இஸ்ரேலிய அரசியல் தலைமை மூலம் அந்த தேசம் முழுமையாக தொடர் அழிவை சந்திக்க கூடியதாக நிலைமை மாறி வருகிறது. அதேநேரத்தில் பாலஸ்தீன மக்கள் இழக்க இனி ஒன்றுமே இல்லை என்பதே உண்மையாகும்.அதே நேரத்தில் இப்போது ரத்து செய்யப்பட்ட கூட்டங்களில் தாக்குதல் திட்டத்திற்கு "மாற்று" பற்றி இஸ்ரேலுடன் பேச எதிர்பார்க்கிறோம் என்று பிடென் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸாவில் இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்திற்கான தற்போதைய முன்மொழிவை ஹமாஸ் நிராகரித்துள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது. உ பழடனடி போர் நிறுத்தம் கோரிய ஐ.நா பாதுகாப்பு சபையின் தீர்மானம் "சேதத்தை" ஏற்படுத்தியுள்ளது என்பதை இது காட்டுகிறது.பாலத்தீன ஆயுதக் குழுவின் ஏற்க முடியாத கோரிக்கைகளுக்கு இஸ்ரேல் அடிபணியாது என்று பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் இருந்து இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும் என்றும், போரை நிறுத்தவும் ஹமாஸ் கோரிக்கை விடுத்துள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது. அதேநேரம் இஸ்ரேலின் அறிக்கை கிட்டத்தட்ட எல்லா விஷயங்களிலும் தவறானது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

திங்கட்கிழமை ஐ.நா. பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னதாகவே ஹமாஸின் அறிக்கை தயாரிக்கப்பட்டதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

ஹமாஸ் ராணுவப் பிரிவின் துணைத் தலைவர் மர்வான் இசா இரண்டு வாரங்களுக்கு முன்னர் நுசைரத் அகதிகள் முகாமின் சுரங்கப்பாதை வளாகத்தில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதை உறுதி செய்திருப்பதாக

உளவுத்துறை அறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் சரிபார்த்தோம். மார்வான் இசா வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்," என்று இதுகுறித்து இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி தெரிவித்தார்.

இஸ்ரேல் தெரிவிப்பதில் தனக்கு "நம்பிக்கை இல்லை என்றும் அந்த அமைப்பின் ராணுவத் தலைமை மட்டுமே இதுகுறித்து "இறுதியாக ஏதாவது சொல்லும்" என்றும் ஹமாஸ் அரசியல் தலைவரான இஸாத் அல் ரிஷ்க் கூறுகிறார்.

இசா இந்தக் குழுவின் "மூன்றாம் நிலையில் இருக்கும் தலைவர்" என்றும், அக்டோபர் 7ஆம் தேதி தெற்கு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் "முக்கிய ஏற்பாட்டாளர்களில் ஒருவர்" அவர் என்றும் ரியர் அட்மிரல் ஹகாரி கூறியுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில், 1,200 பேர் கொல்லப்பட்டனர், 253 பேர் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் காஸாவில் பதில் தாக்குதல் மேற்கொண்டது. காஸாவில் இதுவரை 32,400க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 81 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக முட்டுக்கட்டை நிலவி வருகிறது. காஸாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமல்படுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிராக இஸ்ரேல் கடும் எதிர்வினையைப் பதிவு செய்துள்ளது.

கடுமையான சண்டை காரணமாக நோயாளிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆபத்தில் இருப்பதாக பாலத்தீனர்கள் மற்றும் உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு காஸாவில் விமானத்தில் இருந்து போடப்பட்ட மனிதாபிமான உதவிகளைச் சேகரிக்கும்போது 18 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாக காஸாவில் உள்ள ஹமாஸின் அரசு ஊடக அலுவலகம் செவ்வாயன்று கூறியது.

உணவுப் பொட்டலங்களைச் சேகரிக்கும்போது 12 பேர் கடலில் மூழ்கி இறந்தனர். அதேநேரம் பொருட்களை எடுக்கும்போது ஏற்பட்ட " கூட்ட நெரிசலில்" சிக்கி ஆறு பேர் இறந்தனர் என்று கூறப்பட்டது.

இந்த அறிக்கையில் மேலதிக தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. திங்களன்று வடக்கு நகரமான பைட் லாஹியாவில் கடற்கரைக்கு அருகே ஏர் டிராப்பின் போது குறைந்தது ஒரு நபராவது நீரில் மூழ்கியதை வீடியோ காட்சிகள் காட்டின.

திங்களன்று அமெரிக்க விமானம் வடக்கு காஸாவில் 18 மனிதாபிமான உதவிப் பொட்டலங்களைப் போட்டதாக பென்டகனை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் தெரிவித்தது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் யூத பயங்கரவாத தாக்குதலை ராஃபாவில் தொடர்ந்து நிகழ்த்த அணைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்ற சூழ்நிலையில் அமெரிக்கா இதற்கு ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை என்று உறுதிபட கூறியுள்ளது. இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசியல் அமைப்பு தலைவர் பெஞ்சமின் நிதான்யாகு ஒரு கடுங் கோட்பாடு நடவடிக்கையை அப்பாவி மக்கள் மீது திணித்து ஒட்டுமொத்த தேசத்தையும் இல்லாமலாக்கி டெல் அவியுடன் இணைத்து கொள்ள முயற்சி செய்து வருகிறார். ஆனால் இது எந்தவொரு நிலையிலும் சாத்தியமே இல்லை. இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசியல் தலைமை காலம் கடந்து மிகுந்த சேதத்தை சந்தித்த பிறகு தான் நாங்கள் உணர்ந்து கொள்வோம் என்று எண்ணுவது போல் தான் தற்போதைய நடவடிக்கைகளை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. நிச்சயமாக போரின் முடிவில் இஸ்ரேல் மிகுந்த மனித உயிர்களை இழந்து ஆதரவற்ற நிலையில் சர்வதேச சமூகத்தில் இருந்து தனித்து விடப்படும் என்பது மட்டும் நிச்சயம் என்பதே இன்றைய நிலையாக இருக்கிறது....!

# அஸாத் சாலி பௌண்டேஷனினால் கொழும்பு மக்களுக்கு உலர் உணவு பொதிகள்



(அஷ்ரப் ஏ.சமத்)

முன்னாள் ஆளுநர் அசாத் சாலி பௌண்டேஷன் இம்முறையும் புனித நோன்பு காலத்திற்கான கொழும்பில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் (27) கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

அசாத் சாலி பௌண்டேஷன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான உலர் உணவுப் பொதிகளை அதன் தலைவர் அசாத் சாலி வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹம்மட் அல் கந்தானி கலந்து கொண்டு கொழும்பு வாழ் வறிய மக்களின் நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளையில் சமய நல்லிணக்கத்தையும் இன உறவையும் கட்டி எழுப்பும் நோக்கிலான இப்தார் நிகழ்வு







(பீ.எம்.முக்தார்)

பௌத்த,கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய சமயப் பாடசாலை மாணவர்களிடையே புரிந்துணர்வையும் சமய நல்லிணக்கத்தையும் இன உறவையும் கட்டி எழுப்பும் நோக்கிலான இப்தார் நிகழ்வென்று அண்மையில் பேருவளையில் இடம்பெற்றது.

களுத்துறை மாவட்ட அஹதியா சம்மேளன தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான எம்.எச்.எம். உவைன் ஹாஜியாரின் ஏற்பாட்டில் சரித்திரப் பிரசித்தி பெற்ற கெச்சிமலை தர்ஹா வளவில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பேருவளை பிரதேச செயலாளர் பிரிவின் பேருவளை மொரகல்ல எல்லைக்குட்பட்ட சமயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மூன்று மதங்களைச் சேர்ந்த மத குருமார்கள், பேருவளை முன்னாள் உப நகர பிதா ஹஸன் பாஸி பிரதேச செயலாளர் ரன்ஜன் பெரேரா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார உட்பட அரச அதிகாரிகள்,அரசியல் வாதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிலோன் மீடியா போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு

சிலோன் மீடியா போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலில் போரத்தின் தலைவர் கலாநிதி ரியாத் ஏ மஸ்ஜித் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் ஏ. எஸ். எம். முஜாஹிதின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் ரமழான் பற்றிய மார்க்க சொற்பொழிவினை சாய்ந்தமருது மஸ்ஜிதுல் பலாஹ் பேஷ் இமாம் மௌலவி ஏ.நௌபர் நிகழ்த்தியதோடு நன்றியுரை போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமர் நிகழ்த்தினார்.



இவ் இத்தார் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஏ மன்சூர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தின் பிடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டதோடு உலமாக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பறகஹதெனியாவில் 1000 பேருக்கு நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வு





(இக்பால் அலி)

ஜம்மிய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா மற்றும் பறகஹதெனிய ஜாமிஉத் தவ்ஹீத் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய இணைந்து நடத்திய நோன்பு திறக்கும் விசேட இப்தார் நிகழ்வு பறகஹதெனிய தாரூத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட மைதானத்தில் தலைவர் அஷ்ஷெய்க் என். பீ. எம். அபூபக்கர் சித்தீக் மதனி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஜம்மிய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளர் ஏ.எல். கலிலுர்ரஹ்மான் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது கலாநிதி எம். ஆர்.எம். அம்ஜத் ராசிக் மதனி மற்றும் அஷ்ஷெய்க் ரஸ்மி க்ஷாஹீத் அமீனி ஆகியோர்களுடைய மார்க்கச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

1000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## தொடர்கதையாகி வரும் மத்ரஸா பிரச்சினைகள்

நாங்கள் பாடசாலை சென்ற காலத்தில் பாலர் பிரிவிருந்து உயர்தரம் வரை தண்டனை கிடைத்திருக்கிறது. இன்று பாடசாலை வர சில தினங்கள் தடை வரும். அல்லது பெற்றொரை அழைத்து வரவ் சொல்வர். ஆனால் அக்காலத்தில் அடி முழக்காலில் நிற்க வைத்தல் போன்ற தண்டனைகளே எங்களுக்கு இருந்தன. இவை உடனடி நேரடி எங்களுக்கான தண்டனையாகும். அக்காலத்தில் எல்லா ஆசிரியர்களும் கையில் பிரம்புடன் இருப்பர். வகுப்புக்குச் செல்லும் போது பிரம்புடன் செல்வர். இது தான் ஆரம்பத் தண்டனையும் ஆகும். குற்றத்திற்கேற்ப படும் பிரம்படிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும்.

அடுத்த தண்டனைதான் முழங்காலில் நிற்க வைத்தலாகும். செய்த குற்றத்தின் அளவுக:கு முழங்காலில் நிற்கும் நேரமும் அதிகமாக இருக்கும். இது கடும் தண்டனையாகக் கருதப்படும். திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் முழங்காலில் நிற்க வேண்டும். இது தரும் வலியை விட அதனால் கிடைக்கும் வெட்கம் என்பது பலம் பொருத்தியதாகும். அனைத்து மாணவர்கள் ஆசிரியர்கள் வேடிக்கை பார்ப்பதும் ஊரில் பரம்புவதும் அடியை விட அதிக வலியைத் தரும்.

அக்காலத்தில் பெற்றோர்கள் இந்தகைய தண்டனைகளை தமது பிள்ளைகளைத் திருத்த ஆசிரியர்கள் வழங்கும் சிறந்த மருந்தாகவே கருதுவர். உண்மைதான். அவ்வாறு தண்டனை பெற்றதால் தான் நாம் இன்று சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கிறோம். எமது ஒவ்வொரு உயர்ச்சிக்கும் அந்த தண்டனைகளின் பங்கு உண்டு. தண்டனை தந்த ஆசிரியர்களின் கௌரவமும், மரியாதையும் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

இவ்வாறு பெற்றோர் இத் தண்டனைகளை ஏற்றுக் கொள்ளவும், படித்தவர்களிடம் ஆசிரியர் கௌரவம் மரியதையும் அதிகரிக்கவும் காரணம் அசிரியர்கள் தண்டனை வழங்குவதாகும். இவை குற்றத்திற்கேற்ற அளவில் வழங்கப்பட்டன. சூழலுக்கு ஏற்பட்ட நிலையில் வழங்கப்பட்டன.

பிரம்பால் அடிப்பார்கள் வலிக்கும் ஆனால் காயம் வராது. முழங்காலில் நிற்பாட்டுவர். ஆனால் மழையிலே கடும் வெளியிலே நிற்பாட்ட மாட்டார்கள். இத்தண்டனைகளை வழங்கு முன் குறிப்பிட்ட மாணவர்களின் நிலையை பரிசீலிப்பார்கள். ஏன் இந்தக் குற்றத்தை செய்தான் என்பதை ஆராய்வர். மாணவர் சாப்பிடாமல் வந்திருக்கின்றனரா என்று பார்ப்பர். இதனால் தண்டனை மாணவர்களைத் திருத்தி விடுகிறது.

நான் இதை இப்போது ஏன் கூறிறுகின்றேன் என்று உங்களுக்கு விளங்கியிருக்கும். கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மத்ரஸாவில் மாணவர்கள் சிலருக்கு வழங்கப்பட்ட தண்டனை பற்றிய படங்கள் இதை தடுக்க அல்லது நிறுத்த முயன்ற ஒருவர் ஒருவருக்கு உஸ்தாத் (ஆசிரியர்கள்) கொடுத்த பதில் இதைக் கேட்க நீங்கள் யார் என்று கேட்ட கேள்வி இவை சமூக ஊடகங்களில் வெளிவந்தது. மட்டுமல்ல தொலைக் காட்சிகளில் சிங்கள சேவைகளில் பிரதான செய்திகளில் ஒளிபரப்பப்பட்டன. படங்களும் காட்டப்பட்டன.

ஸஹ்ரானின் பிரச்சினையோட மத்ரஸாக்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துள்ள ஈஸ்டர் தாக்குதலின் பின் வேகமடைந்த மத்ரஸா எதிர்ப்பு சற்று அமைதியாககி கொண்டிருக்கும் போது மத்ரஸாவொன்றின் மாணவன் கொலை செய்யப்பட்ட விவகாரம் வந்தது. ஒரு உஸ்தாத் கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து இன்னுமொரு மத்ரஸாவின் மாணவன் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் நடந்தது. இது தொடர்பாகவும் பள்ளி நிர்வாகத்திற்கு குற்றம் சுமத்தப்பட்டது. அதன்பின் தற்போது நோன்பு பிடித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் உாயி நேரத்தில் தூங்கவில்லை என்ற குற்றத்திற்கு கடும் வெயிலில் முழங்காலில் நிறத்தியுள்ளனர். இவை உத்ரஸா பற்றிய எதிர்ப்புக்கு தீனிபோடுவதாகும்.

நிலையில் மத்ரஸா மனித உரிகைளை மிறுகிறத என்று காட்ட இது சிறந்த உதாரணமாகி விட்டது. மனித உரிமை என்பத நாட்டின் சட்டத்தில் உள்ளது. இது பற்றி செயற்பட மனித உரிமைகள் ஆணைக்குழுவும், அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களைத் தாக்குதல் மட்டுமல்ல பிள்ளைகளை பெற்றொர் தாக்குவதும் மனித உரிமைகள் விதிகளின்படி தடை செய்யப்பட்டுள்ளது. இதன்படி எந்த மாணவர்களையும் தாக்க முடியாது. அது மட்டுமல்ல மாணவர்கள் தாக்கப்பட்டால் மாணவர்களுக்கு இம்சை இழைக்கப்பட்டால் அதற்கு எதிராக செயற்பட குற்றவியல் சட்டமும் உள்ளது. பொலிஸ் நிலையத்தில் முறையிடலாம். ஆசிரியர் கைது செய்யப்படலாம். இது நடந்தம் இருக்கிறது. நடந்தும் வருகிறது.

எனவே, மாணவர் தண்டனை என்பது தற்போதுள்ள சட்டங்களின்படி தடை செய்யப்பட்டதாகும். மாணவர்களை சாதாரண காரணம் காட்டி பாசடாலையிலிருந்த விலக்கி விடலாம். ஆனால் அடிக்கவோ தண்டிக்கவோ முடியாது.

இந்த மாணவர்கள் செய்த குற்றம் தூங்க வேண்டிய நெரத்தில் தூங்கவில்லை என்று கூறப்பட்டது. தூக்கம் என்பது பலவந்தமாக வருவதல்ல. எனவே, தூங்கவில்லை என்று தண்டனை வழங்குவது சரியா? மற்றது இதற்கு தண்டனையாக கடுமையான வெயிலில் முழங்காலில் நிற்க வைப்பது பொறுத்தமானதா?

இதைவிட நோன்பு காலம். நோன்பு பிடித்துக்கொண்டிருக்கும் மாணவர்களை கடுமையாக வெயிலில் முழங்காலில் நிற்க வைப்பது சரியா? மாணவர்களை மைதானங்களில் விளையாட இடமளிக்க வேண்டாம். விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டாம் பின்போடுங்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. காரணம், நாட்டில் நிலவும் கடும் வெயில் ஆகும். இந்த நிலையில் மாணவர்கள் மயக்கமுற்றால் நோன்பின் நிலை என்ன? வெயிலில் தாங்க முடியாது ஒருவர் இறந்தமை பற்றி பத்திரிகைகளில் வெளிவந்ததை நாம் கண்டோம்.

நோன்பு பிடிப்பவர்களுக்கு கஷ்டம் என்பதனால் தான் அரசாங்கம் முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறையை வழங்குகிறது. அரசாங்கம் புரிந்து ஏற்றுக் கொண்டு செய்ற்படும் நிலையில் நோன்பின் கஷ்டங்களை எமது மத்ரஸாக்கள் உணராது மாணவர்களை கடும் வெயிலில் நிறுத்துவது சரியா?

சில மத்ரஸாக்களின் செயற்பாடுகளின் இவ்வாறு நடக்க காரணம் அவற்றை நிர்வகிக்கவும் கட்டப்படுத்தவும் தேவையான போது அறிவுத்தல் வழங்கவும் ஒரு நிறுவனம் இல்லாமையாகும். பாடசாலைகள் விடயத்தில் தகுதிபெற்ற நிர்வாகம் பற்றிய அனுபவமுள்ள பரீட்சைகளில் சித்திபெற்ற அதிபர்கள் இருக்கின்றனர். எவரும் அதிபராக நேரடியாக நியமனம் பெறுவதில்லை. ஆசிரியராக சேர்ந்து உரிய காலம் சேவையாற்றி அந்த அனுபவத்துடன் அதிபர் பரீட்சை எழுதி சித்தியடைந்து அதிபர் பதவியின் ஆரம்ப தரத்தில் நியமனம் பெற்றுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்படுபவர் அனுபவம் உடையவராக இருக்கிறார்.

இவ்வாறான அமைப்பு மத்ரஸாக்களில் இல்லை மத்ரஸாக்களை பதிவு செய்வதோடு முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களம் தனது கடமையை முடித்துக் கொள்கிறது. ஒரு செல்வந்தரின் உதவியுடன் மத்ரஸாவை ஆரம்பிப்பார்கள். தன்னைத் தானே அதிபராக்கிக் கொள்கிறார்கள். அவரது நிர்வாகத் திறமை நிர்வாக அனபவம் எங்கும் பார்க்கப்படுவதில்லை. பதிவு செய்த பின் என்ன நடக்கிறது என்று பார்கக் எவருமில்லை. பொதுவான பாடத்திட்டமொன்று இல்லை. தஃவா கொள்ளைகளுக்கெட்ப தனித்தனி மத்ரஸா சில ஊர்களில் பல மத்ரஸாக்கள். அவர்களே பரீட்சை வினாதாள்களை தயாரித்து அவர்களே திருத்தி புள்ளி வழங்கி பட்டங்களையும் வழங்கிக் கொள்கிறனர். உஸ்தாத்மார்களுக்கோ அதிபர்களுக்கோ தேவையான தகுதிகள் எங்கும் விதிக்கப்பட்டில்லை. நாட்டின் சட்ட திட்டங்கள் மத்ரஸாக்களுக்கு இல்லை என்ற நிலையிலேயெ சில மத்ரஸாக்கள் செயற்படுகின்றன. இதன் ஒர அங்கமே குறிப்பிட்ட மத்ரஸாவில் வழங்கிய தண்டனையாகும்.

எனவே, இவை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும். மத்ரஸா பதிவுளில் கவனம் எடுக்க வேண்டும். மத்ரஸா நிர்வாகத்திற்கு முஸ்லிம் திணைக்களத்தில் ஒர் சபை வேண்டும். இதன் மூலம் பொதுவான பாடத்திட்டம் பொதுப்பரீட்சை நிதி பரிசீலனைகள் பரிசோதனைகள் வர வேண்டும். மத்ரஸா ஆசிரியர் அதிபர்களுக்கான தகுதிகள் நிர்ணயிகப்பட்ட வேண்டும். இவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும். இதற்கான நிர்வாக பயிற்சி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பயிற்சி வழங்குவத கடினம் எனின் அதிபராக அல்லது பிரதி அதிபராக இளைப்பாறிய அதிபர் ஒருவரை நியமித்து நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.






**நாச்சியாதீவு பர்வீன்**

கேரளத்தின் ஆலப்புழா மாவட்டத்தில் ஹரிப்பாடுவைச் சேர்ந்த ஒரு இளைஞன். புதிதாகத் திருமணமான அவன், வளைகுடா நாடுகளில் ஏதேனும் ஒரு சிறந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கனவு காண்கிறான். பல முயற்சிகளுக்குப் பிறகு, சவூதி அரேபியாவில் பணிபுரியும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. இருப்பினும், ரியாத்தின் காலித் சர்வதேச விமான நிலையத்தில் இறங்கியவுடன் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறான். பின்னன் தனது முதலாளி (அர்பாப்) என்று நம்பும் ஒரு அரேபியரால் அழைத்துச் செல்லப்படுகிறான். பாலைவனத்தின் நடுவில் உள்ள ஒரு கால்நடைப் பண்ணைக்கு அந்த முதலாளி அவனை அழைத்துச் செல்கிறான். நஜீப்பின் மிக மோசமான கனவை உறுதிப்படுத்துகிறான். அர்பாப் நஜீப்பை பண்ணை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கிறான்.

நஜீப் பின்னர் ஒரு அடிமைத் தொழிலாளியாகவும் சவுதி அரேபியாவின் தொலைதூர பாலைவனங்களில் மூன்றரை ஆண்டுகளாக செம்மறி ஆடு மற்றும் ஒட்டகங்களை மேய்ப்பதற்காக பயன்படுத்தப்படுகிறான். அவனுக்கு சரியான உணவு கிடைப்பதில்லை அரைப் பசியுடன் இருக்கிறான். முகம் கழுவுவதற்குக் கூட தண்ணீர் மறுக்கப்படுகிறது. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவதிப்படுகிறான். பண்ணையின் மிருகத்தனமான மேற்பார்வையாளர், துப்பாக்கி மற்றும் தொலைநோக்கி மூலம் நஜீப்பைக் கட்டுப்படுத்தி, அடிக்கடி அடிக்கிறார். இப்போது நஜீப் இந்த புதிய விதியை வெறும் மனித அத்தியாவசியங்கள் இல்லாமல் நிர்வகிக்க வேண்டியிருந்தது.

மொழி, இடங்கள் அல்லது மனிதர்கள் தெரியாத ஒரு நாட்டில், அவன் எந்த மனித தொடர்புகளிலிருந்தும் வெகு

**- ஜெம்சித் ராபி-**

1990 களில் வளைகுடாவிற்கு வேலை நிமிர்த்தம் செல்லும், நஜீப் அனுபவிக்கும் இன்னல்கள் மற்றும் அடிமைத்தனம் பற்றி எழுதப்பட்ட நாவல் இது.

அண்மையில்தான் இந்நாவலின் அறிமுகம் கிடைத்தது. இதுவரை இப்படி ஒரு நாவல் வாசிக்கவே இல்லை. நாவலின் முழுமையும் வலியால் கருக்கொண்டிருக்கிறது.

நிஜமான கதை என்பதாலோ என்னவோ, வாசிக்கும் போது ஏற்படும் மனவுருக்கமும் கண்ணீரும் கட்டுபடுத்தவே முடியவில்லை.


இந்நூலை வாசித்து முடித்த போது, நஜீபை நேரடியாகச் சென்று ஆரத்தழுவிக்கொள்ள வேண்டும் போலிருந்து.

அனுபவங்கள் சிறந்த இலக்கியங்களை தருகிறது என்பதற்கு, ஆடு ஜீவிதம் சிறந்த எடுத்துக்காட்டு.

நஜீபினுடைய அவலங்கள் போன்று அல்லது அதைவிடவும் வேதனையான சம்பவங்களை எதிர்கொண்ட பெண்கள் மற்றும் ஆண்கள் எம்மத்தியில் கூட இருக்கலாம் என்பது இந்நாவலை வாசிக்கும் போது எனக்குள் எழும் வினாவாக இருக்கிறது.

கதைச்சுருக்கத்தை இணையத்தின் உதவியோடு கீழே தருகிறேன்.

நஜீப் முகம்மது என்ற இளைஞன்,




கண்காணிப்பாளர் ஒவ்வொரு முறையும் அவரைப் பிடித்து, உணவு மற்றும் தண்ணீரை மறுத்து தண்டிக்கிறார். தப்பி ஓடிவிட்டதாக நினைத்த முந்தைய மேய்ப்பனின் எலும்புக்கூடு மணலில் புதைந்து கிடப்பதைக் கண்டு தப்பிக்கும் முயற்சியை மறந்து விடுகிறான். அப்படியிருந்தும், நம்பிக்கையின் ஒளியை வைத்திருக்கிறாரன். அது சுதந்திரத்தைக் கொண்டுவரும் என்றும் ஒரு நாள் தனது துன்பங்களுக்கு முடிவு கட்டும் எனவும் நினைக்கிறான்.

கடைசியாக ஒரு இரவு, பக்கத்து பண்ணையில் சோமாலியத் தொழிலாளியான இப்ராஹிம் காதிரியின் உதவியுடன், நஜீப் முகமது மற்றும் அவரது நண்பர் ஹக்கீம் கொடூரமான வாழ்க்கையிலிருந்து தப்பிக்கிறார்கள். ஆனால், மூவரும் பல நாட்கள் பாலைவனத்தில் வழி மறந்து தடுமாறுகிறார்கள். இளம்

அங்கு, அகதிகளுக்கு உதவும் சக மலையாளியான குஞ்சிக்காவை சந்திக்கிறான். குஞ்சிக்கா அவனை உடல் நலம் தேறச் செய்து இறுதியாக அவரது சொந்த ஊருக்கு அனுப்பத் திட்டமிடுகிறார். நஜீப் நன்றாக இருப்பதாக உணர ஆரம்பித்தவுடன், குஞ்சிக்காவுடன் இருந்தபோது சந்தித்த ஹமீத்துடன் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதற்காக காவலர்களால் கைது செய்யப்படுகிறான். நஜீப் சுமேசி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுகிறான், அங்கு அர்பாப்கள் தங்களிடம் பணிபுரிந்த தலைமறைவான கைதிகளில் யாரையாவது பிடித்துச் சென்று தங்கள் நிறுவனத்திற்கு அழைத்துச் செல்வார்கள். ஆரம்பத்தில் நஜீப்பும் ஹமீதும் தங்கள் அர்பாப்கள் வருவதைக் கண்டு பயந்து போகின்றனர். ஆனால் ஹமீதின் அர்பாப் தோன்றி ஹமீதை அவருடன் அழைத்துச் செல்லும் வரை அவர்கள் எந்தப் பிரச்சினையும் இன்றி மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்படுகின்றனர். விரைவில், நஜீப்பின் அர்பாப் உள்ளே நுழைகிறார்.

# ஆடு ஜீவிதம் - அயலகப் பார்வை

தொலைவில் இருக்கிறான். நஜீப் படிப்படியாக தன்னை ஆடுகளுடன் அடையாளப்படுத்தத் தொடங்குகிறான். அவைகளில் ஒன்றாக தன்னைக் கருதுகிறான். அவனது மனப்போக்கு இப்போது ஆடுகளின் மனநிலையைப் போலவே மாறியதால் அவனது கனவுகள், ஆசைகள், பழிவாங்கல்கள் மற்றும் நம்பிக்கைகள் மறையத் தொடங்குகின்றன. அவன் ஆடுகளுடன் பேசுகிறான். அதனுடனேயே சாப்பிடுகிறான். அவைகளுடனேயே தூங்குகிறான். கிட்டத்தட்ட ஒரு ஆட்டின் வாழ்க்கையை வாழ்கிறான். பலமுறை தப்பியோட முயன்றாலும்,

ஹக்கீம் தாகம் மற்றும் சோர்வால் இறந்துவிடுகிறான். ஆனால் இப்ராஹிம் காதிரியும் நஜீப்பும் தொடர்ந்து நகர்ந்து, ஒரு சோலையில் தடுமாறி சில நாட்கள் ஓய்வெடுக்க முடிகிறது. அவர்கள் மீண்டும் நகரத் தொடங்க திட்டமிட்டிருந்த நாளில், நஜீப்பைத் தனியாக விட்டுவிட்டு இப்ராஹிம் மறைந்து விடுகிறான். ஆரம்பத்தில் பேரழிவிற்கு ஆளான நஜீப், எப்படியோ அருகில் உள்ள நெடுஞ்சாலைக்குச் செல்ல ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறான். அங்கு ஒரு நாள் முயற்சிக்குப் பிறகு, ஒரு அன்பான அரேபியர் அவனைக் காப்பாற்றி அல்-பத்தாவுக்கு அழைத்துச் செல்கிறார்.

மீண்டும் கால்நடைப் பண்ணைக்கு இழுத்துச் சென்று விடுவாரோ என நஜீப் பயப்படுகின்றான். ஆனால் அதிசயமாக அவர் நஜீப்பை தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை. விமான நிலையத்தில் கடத்தப்பட்டு அடிமையாகப் பயன்படுத்தப்பட்டதை நஜீப் உணர்ந்தார். அதே நேரத்தில் விசா வேறு நிறுவனத்தில் வேலைக்காக இருந்தது.

சில வாரங்களில், தான் சவுதி அரேபிய அதிகாரிகளால் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படப்போகிறோம் என்பது அவனுக்குத் தெரியும். பரவச உணர்வுடன் அவன் தனது சக கைதிகளிடம் விடைபெறுகிறான்.

# அமானா வங்கியின் வளர்ந்து வரும் வலையமைப்பில் கெலிஓய சுய வங்கிச் சேவை நிலையம்




நாடு முழுவதிலும் இலகுவில் அணுகக்கூடிய மற்றும் சௌகரியமான வங்கிச் சேவைகளை அனுபவிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமானா வங்கியின் அர்ப்பணிப்பின் பிரகாரம், அதன் புதிய சுய வங்கிச் சேவை நிலையம் கெலிஓய பிரதேசத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இல. 34/A கம்பளை வீதி, கெலிஓய எனும் முகவரியில் இந்த சுய வங்கிச் சேவை நிலையம் நிறுவப்பட்டுள்ளதுடன், அமானா வங்கியின் 61 ஆவது வாடிக்கையாளர் சேவைப் பகுதியாகவும் அமைந்துள்ளது.

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், கண்டி கிளையின் வியாபார தலைமை அதிகாரி அசாம் அமீர், கம்பளை கிளை முகாமையாளர் மொஹமட் ஹஷீப், மாவனல்ல கிளை முகாமையாளர் - மொஹமட் ராசிக், உள்நாட்டு வியாபார பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகள் என பலரும் இந்த சுய வங்கிச் சேவை நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். வங்கியின் கம்பளை கிளையின் மேற்பார்வையின் கீழ் இந்த நிலையம் இயங்கும். கெலிஓய சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக, பண மீளப் பெறல்கள், பண வைப்பு மற்றும் காசோலை வைப்பு போன்ற அனைத்து வசதிகளும் எந்நேரமும் வழங்கப்படும்.

விரிவாக்கம் தொடர்பில் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "கெலிஓயவுக்கு எமது வலையமைப்பை விஸ்தரிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். கெலிஓயவில் எமது சுய வங்கிச் சேவை நிலையத்தை நிறுவியுள்ளோம். அதனூடாக, மக்களுக்கு நட்பான எமது வங்கியியல் மாதிரியை பொது மக்களுக்கு அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம். சமூகங்களுக்கு எமது வங்கிச் சேவைகளை அதிகளவு அணுகச் செய்யும் செயற்பாடுகளுடன் பொருந்தும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்திருப்பதுடன், அவர்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை சுலபமாகவும், சௌகரியமாகவும் மேற்கொள்ளும் வசதியையும் ஏற்படுத்தியுள்ளோம்." என்றார்.



இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

## மனநலமும் ஆலோசனையும் 25

# எமது இளைய சமூகத்தை பாதுகாப்போம்

இன்றைய எமது பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் நவீன வாழ்க்கை முறைகளை ஆசையோடு பின்பற்றுவதையும் மதரீதியான வழிகாட்டல்களில் இருந்து தூரமாகுவதையும் பண்பாட்டு ரீதியான பல பின்னடைவுகளை சந்திப்பதையும் பார்த்து வருகிறோம்.

அதேபோன்று எவராலும் கற்பனை செய்ய முடியாத சவால்களை அவர்கள் சந்திப்பதையும் காண்கிறோம்.

இந்த பின்னடைவுகளை, சவால்களை சரியாக எதிர்கொள்ள எமது பிள்ளைகளுக்குத் தேவையான அறிவையும் வழிகாட்டலையும் வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோருக்கு போன்று பாடசாலைக்கும் மற்றும் அவர்கள் வாழும் சமூகத்துக்கும் உண்டு.

அதேபோல் எதிர்பாராத பல சவால்களுடன் மாறிவரும் இன்றைய உலகத்தை வெற்றி கொள்ள அவர்களை தயார்படுத்தப்பட வேண்டியது தவிர்க்கமுடியாத ஒரு அவசர தேவையாகி விட்டது.

இந்த தேவையை நிறைவேற்ற நாம் பயன்படுத்த வேண்டிய மிக முக்கியமான ஆயுதங்களில் ஒன்று சரியான கல்வியும் முறையான வழிகாட்டலும் ஆகும்.

எனவே கல்வியின் முதன்மை இலக்கு எமது பிள்ளைகளையும் இளைஞர்களையும் எதிர்கால வாழ்க்கையில் வெற்றிபெறத் தயார்படுத்துவதாகும்.

இன்றைய உலகில் எமது இளைஞர் யுவதிகளின், மாணவர்களின்

ஆசை ஆர்வங்கள்,

பொருத்தமான நண்பர் தொடர்பு,

பொறுப்புகளை நிறைவேற்றும் திறன்,

சிக்கல் தீர்க்கும் திறன்,

இலக்குகளை உருவாக்கும் திறன், விமர்சன சிந்தனை மற்றும்

படைப்பாற்றல் உள்ளிட்ட உயர் மட்ட சிந்தனை திறன்களையும் சீரான நடத்தைகளையும் வளர்க்கக்கூடிய பொருத்தமான கல்வி அனுபவங்களை அவர்களுக்கு வழங்குவது மிகவும் அவசியமானதாக ஆகியிருக்கிறது.

மனிதர்கள் இயற்கையாகவே கற்கும் சுபாவம் உடையவர்கள். கற்பதில் ஆசை ஆர்வத்தை ஊட்டி எதிர்காலத்தை ஆரோக்கியமாக ஆக்கிக் கொள்ள வழிகாட்ட நாம் அனைவரும் கடமைப் பட்டிருக்கிறோம். கல்வியினதும் வழிகாட்டலிதும் இலக்கு ஆர்வமுள்ள, நெகிழ்வான, ஆக்கப்பூர்வமான, திறனாய்வு சிந்தனைகளை வளர்த்து சிந்தனையுள்ள மனிதர்களை உருவாக்குவதாகும்.

எமது பிள்ளைகளின் பாடசாலை வாழ்க்கை மற்றும் அதற்கு அப்பாலுள்ள வாழ்க்கையிலும் கற்றலுக்கான இயற்கையான குணத்தை உடையவர்களாக அவர்களை வைத்திருக்க சிந்தனை ரீதியான எதிர்கால ஆர்வம் கொண்ட கற்றல் உத்திகளை பின்பற்ற அவர்களை பயிற்றுவிக்க வேண்டியிருக்கிறோம்.

இந்த இலக்கை அடைய கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்கள் கற்றலின் உணர்ச்சிகரமான அம்சங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டியது தற்கால சூழ்நிலையில் கட்டாயமாகியிருக்கிறது.

கற்றல் சூழலில் நவீன நடைமுறைகளை பயன்படுத்துதல் மற்றும் முறையான பயிற்சிகளை உருவாக்குதல்,

எதிர்காலத்தை பயனும் பெறுமதியும் உள்ளதாக ஆக்கிக் கொள்ள ஆக்கபூர்வமான சிந்தனைகளை உருவாக்க ஊக்குவித்தல் போன்ற முறைகள் மூலம் மாணவர்களுக்கு தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் அவர்களின் எதிர்காலத்தை பயனும் பெறுமதியும் உடையதாக ஆக்கவும் உதவ முடியும்."

எல்லா பிள்ளைகளுக்கும் நல்ல கல்வியும் முறையான வழிகாட்டல்களும் கிடைக்க ஏற்பாடு செய்வது நம் அனைவரினதும் பொறுப்பு.

நன்கு வளம் பெற்ற, சமத்துவமான, தொழில்ரீதியாக இயக்கப்பட்ட பொதுக் கல்வி முறையை அறிமுகமாக்குவது இன்றைய காலத்தில் கட்டாயமானதாக ஆகியிருக்கிறது.

சமத்துவமும் சிறப்பும் எழுச்சியும் உள்ள சமூகத்தை நிர்மாணிக்க நாம் ஆசைப்படுகிறோம். வெற்றிகரமான, நிறைவான வாழ்க்கையை வாழக்கூடிய வல்லவர்கள் உருவாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்த இலக்கை அடைய வேண்டுமானால் எமது பிள்ளைகளுக்கு பண்பாட்டு ரீதியான, சமூக ரீதியான, சிந்தனை ரீதியான, தொழில் ரீதியான கல்வியையும் வழிகாட்டலையும் வழங்குவது எமது கடமையாகும்.

இதற்கான திட்டங்களை கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், நிர்வாக சபைகள், சமூக அறப்பணி அமைப்புக்கள் சேர்ந்து செய்யும் போது அழகான ஆக்கப்பூர்வமான சமூகத்தை கட்டி எழுப்பும் பணியை தொடங்கலாம். இல்லாத பட்சத்தில் தற்போதைய சூழ்நிலை தொடருமானால் பல பாரதூரமான அழிவுகளை எமது இளம் சமுதாயம் சந்திக்க நேரிடலாம் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## யாழ். பிரதேச செயலக இப்தார் நிகழ்வு





(பரீட் இக்பால்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சனின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் (பதில்) மருதலிங்கம் பிரதீபன், யாழ். மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.சிவரூபன் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும், "இப்தாரும் சமூக நல்லிணக்கமும்" எனும் தொனிப்பொருளில் மௌலவி எம்.ஏ.பைசர் (காஸிமி,மதனி) உரை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## தெ.கி. பல்கலைக்கழக மாணவர்களின் ரமழான் இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட புவியியல் துறை மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த புனித ரமழான் இப்தார் நிகழ்வு (28) பல்கலையின் கடற்கரை மணலில் இடம்பெற்றது.

கலை கலாசார பீட புவியியல் துறை பல்லின மாணவர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வில் கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், பூவியியல் துறைத் தலைவர் கே. நிஜாமிர், சிரேஷ்ட பதிவாளர் எம். ரீ. அஷ்ஹர் உள்ளிட்டவர்களுடன் திணைக்கள தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.




பயாஸா பாஸில்




*1.* இறைவன் அருளியிருக்கும் அனைத்து அருட்கொடைகளுக்கும் நன்றியுடையவர்களாக இருங்கள்.

*2.* தேவையானதை பட்டியல் படுத்தி அதிகமதிகம் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள்.

*3.* உங்களால் எட்டிப் பிடிக்க முடியும் என நீங்கள் நினைக்கும் இலக்குகளை வகுத்துக் கொள்ளுங்கள்.

*4.* நேரமுகாமைத்துவம் செய்து கொள்ளுங்கள்.

*5.* குறித்த நேரத்தில் எதையும் செய்து முடிப்பதில் உறுதி கொள்ளுங்கள்.

*6.* வாக்குறுதியளித்தால் நிறைவேற்றப் பழகுங்கள்.

*7.* யாருக்கேனும் எதையும் செய்து கொடுப்பதாய் இருந்தால் எப்பாடுபட்டாவது செய்து கொடுங்கள்.

*8.* சுவாரஷ்யமான விடயங்களை படிக்க முயலுங்கள்.

*9.* ஓய்வு நேரத்தில் புத்தகம் வாசியுங்கள்.

*10.* உற்சாகமாய் எந்த வேலையையும் எதிர்கொள்ளுங்கள்.

*11.* வாய்விட்டு சிரிக்க பழகுங்கள்.

*12.* நேரம் , உணர்வு , படைப்பாற்றல் நல்லெண்ணம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

*13.* மனச்சாட்சிக்கு திருப்தியாய் நடந்து கொள்ளுங்கள்.

*14.* சிக்கல்களை சவால்களாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

*15.* உள்ளுணர்வைக் கூர்மைப்படுத்துங்கள்.

*16.* எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்திடுங்கள்.

*17.* மிகையான கோபத்தை விட்டும் விலகிருங்கள்.

*18.* மனதுக்கு மகிழ்ச்சி தரும் விடயங்களில் ஆர்வம் காட்டுங்கள்.

*19.* இலட்சியம் கனவுகள் கடமைகளை தள்ளிப் போடாதிருங்கள்.

*20.* உடலுக்குத் தேவையான ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள்.

*21.* ஏனையோரையும் மதிக்க பழகுங்கள்.

*22.* சுயமரியாதையை தக்க வைத்துக் கொள்ளுங்கள்.

*23.* எளிமை , பணிவு போன்றவற்றை எப்போதும் அணிந்து கொள்ளுங்கள்.

இவற்றை வாழ்க்கையில் கடைபிடித்து வாருங்கள்..
வெற்றி உங்களைத் தேடி வரும்..!!

சினாஸ் மன்சூர்

இலங்கை முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரையிலும் தேசத்தைப் பொறுத்த வரையிலும், இஸ்லாமிய கற்கைகள், கல்வி, உயர் கல்வி சமூகப்பணிகள், தேசிய பங்களிப்புக்கள் என அளப்பரிய சேவைகளைச் செய்த செய்கின்ற ஆரவாரமற்ற அமைதியான அடக்கமான எளிமையான ஒரு மிகப் பெரிய ஆளுமையாக மௌலவி ஏ.எல். எம் இப்ராஹீம் அவர்களை அறிமுகம் செய்தால் என்னோடு எவரும் முரண் பட மாட்டார்கள்.

மாவனல்லை உயன்வத்தையில் மகத்தானது.

இஸ்லாஹிய்யா ஆண்கள் பெண்கள் கல்லூரிகள், ஆயிஷா சித்தீகா மகளிர் கல்லூரி என்பவற்றின் ஸ்தாபக முன்னோடி உறுப்பினர் அவர் என்பதை நாம் அறிவோம்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக இன்று சிங்கள மொழி மூல தாயிகளையும் உலமாக்களையும் உருவாக்குகின்ற தன்வீர் அகடமியின் ஸ்தாபகரும் அவர் என்பது அவரது சேவைகளுக்கு முத்தாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆயிஷா சித்தீகா மற்றும் தன்வீர் நிறுவனங்களிற்கு வருகை தந்து அவற்றின் கற்கைகள் குறித்த சுயமான



அவர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறிய பின்னர் ஒரு பேராசிரியர் இன்மையால் மௌலவி இப்ராஹீம் அவர்களுக்கு இலங்கையில் கலாநிதி கற்கைகளை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது, அவர் கலாநிதி கற்கைகளை நிறைவு செய்திருந்தால் இன்று பலரும் இலங்கையிலேயே அந்தத் துறைகளில் கலாநிதி கற்கைகளை நிறைவு செய்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

தான் பிறந்த மாவனல்லை பிரதேசத்தில் இஸ்லாமிய தஃவா மற்றும் கல்வி மறுமலர்ச்சியில் அவரது பங்களிப்பு மகத்தானதாகும்.

முஸ்லிம் சமூக அமைப்புக்களை

# மௌலவி ஏ.எல்.எம். இப்ராஹீம் கபூரி (எம்.ஏ) வாழ்நாள் சாதனையாளர்



1937 ஆம் ஆண்டு பிறந்த மௌலவி இப்ராஹீம் அவர்கள் நூராணியா முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். 1948 ஆம் ஆண்டு கபூரியா அறபுக்கல்லூரியில் இணைந்து சுமார் 9 வருடங்கள் கற்று 1957 ஆம் வருடம் அல்-ஆலிம் அல்-கபூரி பட்டத்தைப் பெற்று பின்னர் இரண்டு வருடங்கள் அங்கு விரிவுரையாளராக பணியாற்றினார்.

1959 ஆம் ஆண்டு அறபு ஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்ட மௌலவி இப்ராஹீம் 1963 ஆம் ஆண்டு அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து கொண்டார்.

1968 ஆம் வருடம் கொழும்பு பலகலைக் கழகத்தில் GAQ கற்களையும் பின்னர் பேராதெனிய பலகலைக் கழகத்தில் கலைமாணி (BA) கர்கைகளையும் நிறைவு செய்து முதல் தரத்தில் (Hons) தேறினார், 1973 ஆம் ஆண்டு




பேராதெனிய மற்றும் களனி பல்கலைக் கழகங்களில் இஸ்லாமிய நாக்ரீகத்துறை விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

1987 ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக சவூதி அரேபியா சென்று 1989 ஆண்டு நாடு திரும்பிய பின்னர் இலங்கை ஜமாத்தே இஸ்லாமி இயக்கத்தின் அமீராக தலைமைப் பொறுப்பை ஏற்று 1992 ஆண்டு வரை அந்த பொறுப்பில் இருந்தார்.

இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவராக இருந்த காலங்களில் தப்ஹீமுள் குரானை சிங்கள மொழியில் கொண்டுவருதற்கு முன்னோடியாக இருந்து செயற்பட்டதன் மூலம் சிங்கள மொழியில் அல்-குரானையும் அதே போல் தப்ஸீரையும் வெளிக்கொணர அவரது பங்களிப்பு

மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அவர் என்னை பலதடவைகள் வேண்டிக் கொண்டுள்ளார்கள்.

மதீனாவில் உள்ள இஸ்லாமிய பலகலைக் கழகத்திற்கு இலங்கை மாணவர்களை அனுப்புவதற்கான முன்னோடி முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டதோடு பல சர்வதேச இஸ்லாமிய பலகலைக் கழகங்களிற்கு இலங்கை முஸ்லிம் மாணவர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்.






அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் அதி முக்கிய பிரமுகராக இருந்து அவர் உலமாக்களிற்கும் தேசத்திற்கும் ஆற்றிய சேவைகள் மகத்தானவை,.

கபூரியா அரபிக்கல்லூரியின் முன்னாள் அதிபர் பிரபல சன்மார்க்க அறிஞர் உமர் ஹஸரத்தின் மாணவர்களுள் ஒருவரான அவர் ஜாமியா நளீமியா உருவாக்கத்தின் பொழுதும் அதன் பாடவிதானத்தை தயாரிக்கின்ற பொழுதும் பிரதான பங்களிப்பினைச் செய்தவர்.

ஜாமியாஹ் நலீமியாஹ் எனும் இஸ்லாமிய பல்கலைக் கழகத்தை மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்கள் ஸ்தாபிக்க எண்ணம் கொண்ட பொழுது அறிஞர் எ.எம்.எ. அசீஸ் அவர்களின் தலைய்மையில் அமைக்கப் பட்ட 10 பேர் கொண்ட தூதுக் குழுவில் நீதிபதி அமீன், மர்ஹூம் தாசீம் அல்-அஸ்-ஹறி , மர்ஹூம் மஸ்-ஊத் ஆலிம், கலாநிதி ஷுக்ரி, ஹிபதுல்லாஹ் ஹாஜியார் போன்றோருடன் மொலவி எ.எல். எம் இப்ராஹீம் அவர்கள் இருந்தது மாத்திரமல்லாது நலீமிய்யாவின் முதலாவது பாடத்திட்டத்தை வரைந்தவரும் கூட என்பதனை பலரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

திஹாரியில் அமைந்துள்ள இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினர்களிலும் ஒருவர் மாத்திரமன்றி பல சர்வதேச இஸ்லாமிய அமைப்புக்களில், மாநாடுகளில் இலங்கை முஸ்லிம்களை பிரதிநிதித்துவப் படுத்தியவர்.

சவூதி அரேபியாவை மையமாகக் கொண்ட சர்வதேச இஸ்லாமிய இளைஞர் அமைப்பினது ஸ்தாபக உறுப்பினர் மாத்திரமன்றி, குவைத் சரவதேச இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் ஸ்தாபக உறுப்பினருமாவார். ஆனால் இன்றுவரை வெளிநாட்டு நிறுவனங்களினதோ உள்நாட்டு நிறுவனங்களினது நிலையான கொடுப்பனவுகள் பெறாது சொந்த உழைப்பில் வாழ்க்கை நடத்துபவர்.




இஸ்லாமிக் புக் ஹவுஸ் இருக்கின்ற ஜமாத்தின் தலைமையக கட்டடம் அவரது காலத்திலேயே நிறுவப்பட்டு ஜமாஅத் நிறுவன மயப்படுத்தப்பட்டது எனலாம், அங்கு பல மனித நேயப்பணிகள், ஆய்வுப்பணிகளை மேற்கொள்வதற்குரிய நிறுவன (SIRD) ஒழுங்கமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன.

அவரது காலத்தில் பிரபோதய என்ற சிங்கள இஸ்லாமிய சஞ்சிகையும் வுாந வுசநநெ எனும் ஆங்கில சஞ்சிகையும் இன்னும் பல தமிழ் சிங்கள ஆங்கில பதிப்புக்களும் வெளிக் கொண்டுவரப்பட்டன.

பேராதனை பல்கலைக் கழகத்தில் அறபு இஸ்லாமிய துறைக்கு அவர் பீடாதிபதியாக இருந்த பொழுது தான் நானும் அறபு இஸ்லாமிய நாகரிக துறையில் சிறப்புக் கற்கையை நிறைவு செய்து BA (Hons) பட்டச் சான்றிதழை பெற்றுக் கொண்டேன். தேசிய மற்றும் இஸ்லாமிய பத்திரிகைகளில் வெளிவரும் எனது ஆக்கங்களை அவ்வப்பொழுது வாசித்து விட்டு உளமாற பாராட்டி ஆலோசனைகளும் வழங்கியுள்ளார்.

துரதிஷ்ட வசமாக கலாநிதி /க்ரி

ஐக்கியப்படுத்துகின்ற பல முயற்சிகளை ஏனைய உலமக்களோடு புத்திஜீவிகளோடு இணைந்து மேற்கொண்ட அறிஞர் இப்ராஹீம் ஹசரத் 1980 களில் மஸுத் ஆலிம் (ரஹ்) மௌலவி ரியாழ் (ரஹ்) போன்ற பிரபல உலமக்களுடன் இணைந்து இத்திஹாதுல் முஸ்லிமீன் என்ற அமைப்பை (இன்றைய தேசிய ஷுரா சபை போன்ற) நிறுவும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

பின்னர் பல சமூக முக்கியஸ்தர்களுடன் இணைந்து UNITY FORUM என்ற அமைப்பை ஸ்தாபிக்க அரும்பாடுபட்டார், இன்று பல்வேறு இஸ்லாமிய சிந்தனைப் பள்ளிகளும் முரண்பாடுகளுக்கு அப்பால் இணைந்து செல்கின்ற அழகிய மரபினை உருவாக்கிய சமாதான சகவாழ்வு முயற்சிகளை முன்னெடுத்த முன்னோடிகளில் அவரும் ஒருவர்.

சுதேச இஸ்லாமிய சிந்தனைப் பாரம்பரியம் ஒன்றை வடிவமைப்பதில் அமுலாக்குவதில் தேசிய வாழ்வில் முஸ்லிம் சமூகத்தை சரியான பரிமாணங்களில் வழி நடத்துவதில் அவரது பங்களிப்பு மகத்தானது.

தேசிய ஷுரா சபை உருவாக்கத்தின் பொழுது அவரை அணுகி நாம் ஆலோசனைகள் கேட்ட பொழுது ருஜேவுலு குழுசுருஆ இத்திஹதுல் முஸ்லிமீன் ஆகிய முயற்சிகள் இதே இலக்குகளுடன் தான் ஆரம்பிக்கப்பட்டன என்று வலியுறத்தி மிகச் சிறந்த ஆலோசனைகளை வழங்கியதோடு மாத்திரமன்றி அவர் சற்று சுகயீனமுறும் வரை அதன் நிறைவேற்றுக் குழுவிலும் இருந்து வழி நடத்தியவர்.

மொத்தத்தில் இப்ராஹீம் மௌலவி அவர்கள் ஒரு அறிஞராக புத்திஜீவியாக கல்விமானாக மாத்திரம் இருந்துவிடாது தான் கற்ற சிந்தனைகளை அறிவை அமுலாக்கம் செய்வதில் மிகப் பெரும் செயல் வீரனாக வாழ்ந்துள்ளார், இன்றைய பல முன்னோடி தாஈகளுக்கு சமூக செயற்பட்டாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த முன்னோடியாய் முமாதிரியாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



# அன்று கலனியின்றி ஆரம்பித்தவன், இன்று தேசிய வீரனாய் விடை கொடுத்தான்

## சர்வதேச அரங்கிற்கு முற்றுப்புள்ளியிட்டார் முஹம்மது பஸால்



அரபாத் பஹுர்தீன்

16 ஆண்டுகள் இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணிக்காய் விளையாடி உதைப்பந்தாட்டத்தை ஆரம்பித்த கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்திலேயே வைத்து வெற்றியுடன் கண்ணீர் மழ்க சர்வதேச உதைப்பந்தாட்டத்திற்கு விடைகொடுத்தார் முஹம்மது நைஸர் முஹம்மது பஸால்.

33 வயதான முஹம்மது பஸால் தனது ஆரம்பக் கல்வியினை பாணந்துறை தொடவத்தை அல் பஹ்ரியா மத்திய கல்லூரியில் கற்று அப் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்து 2001ஆம் ஆண்டு பாடசாலை உதைப்பந்தாட்டத் தொடரில் முதல் முறையாக கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் கால்பதித்து அவ்வாண்டின் சம்பியன் மகுடத்தை பாடசாலை வெற்றி கொள்ள மிக முக்கிய காரணமாகவும் திகழ்ந்தார்.

பின்னர் தனது அடுத்த கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக கொழும்பு சாஹிரா கல்லூரியில் இணைந்தார். அங்கிருந்து தனது விடா முயற்சியாலும், அவரின் மிக வேகமான விளையாட்டினாலும் 2008 ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் தனது கனவும் இலட்சியமுமான இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணி வீரன் என்ற இலக்கை எட்டினார் முஹம்மது பஸால்.

இந்நிலையில் இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணிக்காக 2008ஆம் ஆண்டு ஓட ஆரம்பித்த முஹம்மது பஸாலின் கால்கள் இலைப்பார வேண்டிய தருணம் வந்தது. அதற்கமைய கடந்த 25ஆம் திகதி பூட்டான் அணியுடன் இடம்பெற்ற போட்டியுடன் சர்வதேச உதைப்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். அதற்கமைய 16 வருட இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணிக்காய் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்த இவர் கடந்த 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை உதைப்பந்தாட்ட அணியின் தலைவராக மிகப் பெரிய பொறுப்பினை சுமந்து அதனை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

இந்நிலையில் கடந்த 25ஆம் திகதி கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பூட்டான் அணிக்கு எதிரான போட்டியில் தனது இறுதி சர்வதேச போட்டி என்பதனால் மைதானம் முழுமையான ரசிகர்களால் சூழப்பட்டிருக்க மாற்று வீரராய் இரண்டாம் பாதியில் களம்நுழைந்தார். பஸால் உள்நுழையும் போது அணித்தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் பட்டியினை இலங்கை அணியின் தலைவரான கோல்காப்பாளர் சுஜான் பெரேரா தன் கையிலிருந்து கழட்டி பஸாலில் கையில் போட்டுவிட்டு கட்டியணைத்து முத்தமிட்டமை அவர்களின் நட்பினை உணர்த்தி நின்றது.

பஸால் தனது 11வயதில் முதல் முறை கால் பதித்த அதே



இலங்கை உதைப்பந்தாட்டத்தின் தங்க மகன் முஹம்மது பஸால். பின்னர் ரசிகர்களுக்கு கையுயர்த்தி நன்றிகூறினார். அதன் பின்னர் இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தினால் அவருக்கு நினைவுச் சின்னங்கள் பரிசளிக்கப்பட்டன.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முஹம்மது பஸால், ""கடந்த 2001ஆம் ஆண்டு இதே மைதானத்தில் காலில் அணிய உதைப்பந்தாட்டக் காலணி இன்றி என் முதல் உதைப்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்றேன். இன்று 16 வருடங்கள் என் தாய் நாட்டிற்காக உதைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்று நான் ஆரம்பித்த அதே மைதானத்தில் சர்வதேச உதைப்பந்தாட்ட அரங்கிலிருந்து விடை கொடுக்கின்றேன். நினைக்கையில் மிகப் பெருமையாக உள்ளது.

இந்நிலைக்கு நான் வர உதவிய என் பெற்றோர்கள், என் குடும்பத்தினர், என் நண்பர்கள், என் பிரதேச பயிற்றுவிப்பாளர்கள், இலங்கை உதைப்பந்தாட்ட சங்கம் மற்றும் அதன் பயிற்றுவிப்பாளர்கள் என் சக வீரர்கள் என அனைவருக்கும் என் நன்றிகள். உண்மையில் என் மிகப் பெரிய எதிர்பார்ப்பும் இலட்சியமும் இலங்கை அணி சர்வதேச ஆட்டம் ஒன்றில் சம்பியன் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதே அது மிக மிக விரைவில் உண்மையாகும்.




ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் தனது இறுதி ஆட்டத்தில் களம் கண்டு இப் போட்டியில் இலங்கை அணி பலமிக்க பூட்டான் அணியை 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொள்ள, வெற்றியுடன் சர்வதேச உதைப்பந்தாட்ட அரங்கிற்கு கண்ணீர் மழ்க விடை கொடுத்தார்

இப்போது மிகச் சிறந்த அணி ஒன்று உள்ளது. இவ்வணி நிச்சயம் சாதிக்கும். மேலும் பயிற்றுவிப்பாளர் துறையில் தொடர்ந்து கவனம் செலுத்த காத்திருக்கிறேன்"" என்றார் கண்களிலிருந்து கண்ணீர் மழ்க.

எனவே 16 வருடங்கள் இலங்கையின் தேசிய உதைப்பந்தாட்ட சீருடையை அணிந்து விளையாடிய ஒரு வீரனின் கால்கள் சர்வதேச அரங்கிலிருந்து இழைப்பாருகின்றது. நன்றிகள் முஹம்மது பஸால். நாம் நன்றியோடு விடைகொடுக்கிறோம் இலங்கையின் உதைப்பந்தாட்டத்தின் தங்க மகனே உமக்கு.





# பாகிஸ்தான் அணியின் புதிய தலைவராக மீண்டும் பாபர் அஸாம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மற்றும் பயிற்றுவிப்பாளர் இதுவரையில் நியமிக்கப்படாத நிலையில் வீரர்களுக்கான உடற்தகுதி பயிற்சி மற்றும் பரிசோனை இடம்பெற்று முடிந்தவுடன் இது தொடர்பில் இறுதித் தீர்மாணம் எடுக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணி கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் எதிர்பார்த்த இலக்கை அடயாமையால் அதன் தலைவராக இருந்த பாபர் அஸாம் தான் பதவிவகித்த மூவகைப் போட்டிகளுக்குமான தலைவர் பதவியிலிருந்து இராஜனாமாச் செய்திருந்தார். அதனால் இருபதுக்கு இருபது அணியின் தலைவரான வேகப்பந்து வீச்சாளரான ஷஹீன் ஷா அப்ரீடியும்இ டெஸ்ட் அணியின் தலைவராக ஷான் மசூத்தும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஒருநாள் அணியின் தலைவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் புதிய ரி20 தலைவரான ஷஹீன் ஷா அப்ரிடி தலைமையில் பாகிஸ்தான் அணி கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நியூஸிலாந்து சென்று 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்றிருந்தது. இதில் 4:1 என மிக மோசமான தோல்வியுடன் தொடரை இழந்தமையால் ஷஹீன் ஷா அப்ரீடியின் தலைமைப் பதவி மீது அதிர்ப்தி ஏற்பட்டது. பின்னர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முடிவுற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் ஷஹீன் ஷா அப்ரீடி தலைமை தாங்கிய லா/ஹர் கலெண்டர்ஸ் அணி 10 போட்டிகளில் ஒரு வெற்றி மற்றும் 9 தோல்விகளுடன் இறுதி இடத்தைப் பிடிக்க அவரது தலைமை மீது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நம்பிக்கை இழந்தது.

அதனால் மீண்டும் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான பாபர் அஸாமிடம் தலைமைப் பதவியை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீர்மாணித்துள்ளதுடன் அது தொடர்பில் பாபர் அஸாமுடன் பேச்சுவார்த்தை ஒன்றையும் நடாத்தியுள்ளது. இது குறித்த முடிவு வரும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. மேலும் தற்சமயம் நியூஸிலாந்து தொடருக்காக வீரர்களை தெரிவு செய்வதற்கு வீரர்களின் உடற்தகுதியைப் பரிசீலுக்கும் பயிற்சி மற்றும் பரிசோதனை அந்நாட்டு இரானுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் ஓய்வினை அறிவித்து அதனை மீண்டும் வாபஸ் பெற்ற முஹம்மது ஆமீர் மற்றும் இமாத் வசீம் அடங்களாக 29 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதிலிருந்து அடுத்த மாதம் நியூஸிலாந்து அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் மற்றும் அயர்லாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் என்பவற்றுக்கான 15 வீரர்கள் கொண்ட குழாம் அறிவிக்கப்படவுள்ளது. இதன் பேதே பாபர் அஸாம் புதிய தலைவராக மீண்டும் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்டுகின்றது. அத்துடன் அணியின் பயிற்றுவிப்பாளரான முன்னாள் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான கிளெஸ்பி அல்லது முன்னாள் நியூஸிலாந்து விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான ரொஞ்சி அணியின் பயிற்றுவிப்பாளராக அறிவிக்கப்பட வாய்புள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அல் பத்ரியாவுக்கு ஐந்து பதக்கங்கள்

(அப்ஹம் நிஸாம்)

இன்றைய தினம் வதுப்பிட்டிவல மைதானத்தில் நடைபெற்ற அத்தனகலை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மற்றும் விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டிகளில் அல் பத்ரியா அணி 5 பதக்கங்களை வெற்றி கொண்டுள்ளது.

16 வயதின்கீழ் உயரம் பாய்தல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் அல்பதிரியா வெற்றி கொண்டது சிறப்பம்சமாகும்.

அந்த வகையில் முறையே ராஷித், ஆதிப், முஆத் ஆகிய மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொள்ள பரிதி எறிதல் போட்டியில் ரியாஜ் என்ற மாணவன் இரண்டாம் இடத்தையும், 16 வயதிற்கு மேற்பட்ட உயரம் பாய்தல் போட்டியில் மாணவன் மிஷால் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

மிக அண்மை காலத்தில் பாடசாலை ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் அல் பத்ரியா கலந்து கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.